இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 154 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 28 – சனிக்கிழமை 13 ஜனவரி 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 154 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 28 - Saturday 13 January 2024 - Dak 12 Pages ₹ 5.00







முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை துணை அமைச்சர் எம். குலசேகரன், இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டு முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, Zoom Technology தலைவர் வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எந்தச் சூழலிலும் மக்களோடு இருப்பவன்; சக்தியை மீறி உழைப்பவன்!

# நாம் எல்லோரும் ஓரினம்!

## "அயலகத் தமிழர் தினம் - 2024" விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஜன.13-

**"எந்தச் சூழலிலும் மக்களோடு இருப்பவன் நான்; என் சக்தியை மீறியும் உழைப்பவன் நான்; நீராலும் நிலத்தாலும், ஏன் நாடுகளாலும், கண்டங்களாலும் பிரிந்து இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "அயலகத் தமிழர் தினம் - 2024" விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.01.2024) சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

எனக்கு உடல் நலமில்லை உற்சாகமாக இல்லை என்று நேற்று ஒரு பத்திரிகையில் எழுதி இருந்தார்கள். அதை படித்தபோது எனக்கு சிரிப்புதான் வந்தது. எனக்கு என்ன குறை?

தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றபோது, அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? நேற்று ஒரு வீடியோ பார்த்தேன். சென்னையைச் சேர்ந்த ஒரு சகோதரி பேசுகிறார். "கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. அரிசி, சர்க்கரை, கரும்பு வந்துவிட்டது... வெள்ள நிவாரணமாக ஆறாயிரம் ரூபாய் கிடைத்துவிட்டது. ஒரு மாதத்தில் முதலமைச்சரே எட்டாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டார். பொங்கலுக்கு, யாரையும் நான் எதிர்பார்க்கத் தேவையில்லை என்று பேட்டி கொடுத்திருக்கிறார் அந்தச் சகோதரி. அவர் முகத்தில் பார்க்கின்ற மகிழ்ச்சிதான் எனக்கான உற்சாக மருந்து!

> **"தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருக்கின்ற போது, அதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்? நேற்று ஒரு வீடியோ பார்த்தேன். சென்னையைச் சேர்ந்த ஒரு சகோதரி பேசுகிறார். "கலைஞர் மகளிர் உரிமைத் தொகையில் ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. பொங்கல் பரிசாக ஆயிரம் ரூபாய் வந்துவிட்டது. அரிசி, சர்க்கரை, கரும்பு வந்துவிட்டது... வெள்ள நிவாரணமாக ஆறாயிரம் ரூபாய் கிடைத்துவிட்டது. ஒரு மாதத்தில் முதலமைச்சரே எட்டாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டார். பொங்கலுக்கு, யாரையும் நான் எதிர்பார்க்கத் தேவையில்லை" என்று பேட்டி கொடுத்திருக்கிறார் அந்தச் சகோதரி. அவர் முகத்தில் பார்க்கின்ற மகிழ்ச்சிதான் எனக்கான உற்சாக மருந்து!"**

### எந்தச் சூழலிலும் – மக்களோடு இருப்பவன் நான்!

எனக்கு மக்களைப் பற்றிதான் எப்போதும் நினைப்பே தவிர, என்னைப் பற்றி இருந்தது இல்லை. எந்தச் சூழலிலும், மக்களோடு இருப்பவன் நான். என் சக்தியை மீறியும் உழைப்பவன் நான். எனவே இதுமாதிரியான செய்திகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உழைத்துக் கொண்டே இருப்பேன்!

அண்மையில், இதே அரங்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு என்பது, தமிழ்நாட்டை வளப்படுத்த உலகமே திரண்ட மாநாடு என்று சொன்னால், இன்று நடைபெறுவது உலகத்தை வளப்படுத்தச் சென்ற தமிழர்களைக் கொண்டாடும் மாநாடு!

### உலகமே கவனிக்கும் பதவியில் இருக்கும் தமிழர்!

இந்த மாநாட்டுக்கு கிடைத்த மாபெரும் சிறப்புகளில் ஒன்று, சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்ட அமைச்சர் மாண்புமிகு சண்முகம் அவர்கள் இங்கு வருகை தந்திருப்பது! அவர், உலகப் புகழ்பெற்ற தமிழன் மட்டுமல்ல, உலகமே கவனிக்கின்ற பதவியில் இருக்கும் தமிழன்!

நான் சிங்கப்பூர் சென்றிருந்த போது நான் தங்கிய இடத்திற்கே வந்து, எனக்கு சிறப்புச் செய்தார். நேற்று அவரை என்னுடைய வீட்டிற்கே வரவழைத்து மகிழ்ந்தேன். அவரை இன்றும், என்றும் வாழ்த்தி வரவேற்கிறேன். அவரைப் போலவே, இந்த மேடையில், உலகமெங்கும் பல நாடுகளில் இருக்கக்கூடிய பல்வேறு பொறுப்புகளில், அறிவால், ஆற்றலால் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதற்கு சாட்சியாக அமர்ந்திருக்கும் அனைவரையும் நான் உள்ளபடியே வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன்.

### சென்ற நாடுகளின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடும் தமிழர்கள்!

அனைவரது வருகைக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். மேடையிலும், நேரிலும் அமர்ந்திருக்கும், உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற உழைப்புத் திறன்தான் கடல் கடந்தும் தமிழர்கள் வெற்றிகரமாக வாழக் காரணம்! இப்படி புலம்பெயர்ந்த நம் தமிழ்ச் சொந்தங்கள், அந்த நாடுகளுடைய வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் முதுகெலும்பாக இருந்து வருகிறார்கள்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு வெளிநாடுவாழ் தமிழர்களுடைய துயரங்கள் களைய "வெளிநாடுவாழ் தமிழர் நலப்பிரிவு உருவாக்கி அரசாணை வெளியிடப்பட்டதோடு, வாரியம் அமைக்கவும் சட்டமுன்வடிவு உருவாக்கப்பட்டது.


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## ஜனவரி 26ஆம் தேதி கிராம சபைக் கூட்டம்!

### தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜன. 13-

வரும் 26ஆம் தேதி குடியரசு தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. கூட்டம் நடைபெறவுள்ள இடம், நேரம் ஆகியவற்றை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், வரும் 26ம் தேதி குடியரசுத் தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ள இடம், நேரம் ஆகியவற்றை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ள தமிழ்நாடு அரசு, கிராம சபைக் கூடங்கள் மதச்சார்புள்ள எந்தவொரு வளாகத்திலும் நடக்கக் கூடாது என அறிவுறுத்தியுள்ளது.

மேலும், கிராம சபைக் கூட்டத்திற்கான செலவின வரம்பு 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ள அரசு, கிராம சபை கூட்ட நிகழ்வுகளை நம்ம கிராம சபை செயலியில் உள்ளீடு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

### ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன்

## தமிழ்நாடு அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் இன்று சந்திப்பு!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் செல்லும் இக்குழு தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரணம் வழங்க வலியுறுத்துகிறது!

சென்னை, ஜன.13-

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சி குழுவினர் இன்று (13.1.2024 சனிக்கிழமை) சந்திக்க உள்ளனர். தமிழ்நாடு அரசு கோரிய 37 ஆயிரத்து 907கோடி ரூபாய் வெள்ள நிவாரண தொகையை உடனடியாக வழங்குமாறு அவர்கள் வலியுறுத்த உள்ளனர்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய வட மாவட்டங்களில் கடந்த டிசம்பர் மாதம் 3,4 ஆகிய தேதிகளில் மிக்ஜாம் புயல் காரணமாக அதி கனமழை வெளுத்து வாங்கியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியது. மற்ற மூன்று மாவட்டங்களில் பாதிப்புகளை சந்தித்த வட்டங்களில் மட்டும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

இதேபோல், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 17 மற்றும் 18ம் தேதி ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் சென்று பெரும் பாதிப்பு ஏற்பட்டது. வெள்ள சேதங்களை பார்வையிட நெல்லை சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அதிக பாதிப்புள்ள இடங்களுக்கு 6 ஆயிரம் ரூபாயும், குறைந்த பாதிப்புள்ள பகுதிகளுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்தார். இதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 19ம் தேதி டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடியை சந்தித்து, தமிழ்நாட்டின் கனமழை, வெள்ளத்தால் வட மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் அடுத்தடுத்து பாதிக்கப்பட்டிருப்பதை இயற்கை பேரிடராக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை சீர் செய்ய கோரியபடி, தற்காலிக நிவாரணமாக 7ஆயிரத்து 33 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரண தொகையாக 12ஆயிரத்து 659 கோடி ரூபாயும் வழங்குமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்தார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கோரிய வெள்ள நிவாரணத்தொகையை உடனடியாக வழங்க வலியுறுத்தி, அனைத்துக் கட்சி எம்.பிக்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து வலியுறுத்துவார்கள் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை தமிழ்நாடு அனைத்துக்கட்சிக்குழு வருகிற சனிக்கிழமை சந்திக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையிலான இக்குழுவில், காங்கிரஸ் சார்பில் ஜெயகுமார், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சுப்பராயன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நடராஜன், விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் ரவிக்குமார், முஸ்லீம் லீக் கட்சியின் நவாஸ் கனி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சின்ராஜ் ஆகியோர் இடம்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 13-01-2024

# மகிழ்ச்சியைப் பொங்க வைத்த முதல்வர்

தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் பொங்கல் திருநாளுக்கு முன்னதாகவே 'மகிழ்ச்சி'யைப் பொங்க வைத்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'அண்ணன் சீர் கிடைத்துவிட்டது', 'எங்கள் பெற்றோரைப் போலக் கவனிக்கிறார்' என்று பொதுமக்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்க பேட்டிகள் அளித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு - அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பை முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே அறிவித்தார்கள். தமிழ்நாடு முழுவதும் 2 கோடியே 19 லட்சத்து, 71 ஆயிரத்து 113 குடும்ப அட்டைகள் உள்ளன. இவர்கள் அனைவருக்கும் இந்த பரிசுத் தொகுப்பை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இவர்கள் அனைவருக்கும் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, கரும்பு ஆகியவை கிடைக்கும். இத்துடன் ஆயிரம் ரூபாய் பணமும் தரப்படும் என்று தாயுள்ளத்தோடு அறிவித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்தப் பொருட்களும் பணமும் வழங்கும் திட்டத்தையும் சனவரி 11ஆம் தேதி ஆழ்வார் பேட்டை நியாயவிலைக் கடைக்குச் சென்று, தானே தொடங்கி வைத்துவிட்டார் முதலமைச்சர் அவர்கள்.

இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் இருந்து வந்து தமிழ்நாட்டில் தங்கி இருக்கும் ஈழத் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் இலவச வேட்டி, சேலையும் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்பட உள்ளது. இதற்காக ஒரு கோடியே 77 லட்சம் வேட்டிகளும், ஒரு கோடியே 77 லட்சம் சேலைகளும் அரசால் வாங்கப்பட்டுள்ளன. இவையும் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளன. ஏழை எளிய மக்களுக்கு வேட்டி,சேலைகள் கிடைக்கப் போகிறது என்பது ஒரு பக்கம். கைத்தறி, விசைத்தறித் தொழிலாளர்கள் இதன் மூலமாகப் பயனடைகிறார்கள் என்பது இன்னொரு பக்கம் ஆகும். இரண்டு தரப்பினரும் பயனடையும் மாபெரும் திட்டமாகும் இது.

பொங்கல் பரிசுத் தொகுப்புக்காக மட்டும் 2,436.19 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மிகுந்த நிதி நெருக்கடி மிகுந்த சூழலிலும் கனிவான உள்ளத்தோடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவு அனைத்துத் தரப்பினராலும் அவருக்கு வாழ்த்துகளை வாங்கித் தந்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர்தான் மிகப்பெரிய இயற்கைப் பேரிடரை தமிழ்நாடு சந்தித்தது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் முதலிலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்கள் அதன்பிறகும் புயல் - மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - 6 ஆயிரம் ரூபாயை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். ஒன்றிய அரசிடம் நிவாரணத் தொகை கேட்டு தமிழ்நாடு அரசு கோரிக்கைக்கு மேல் கோரிக்கை வைத்து வருகிறதே தவிர, ஒன்றிய அரசிடம் இருந்து ரூபாய் 900 கோடிக்கு மேல் பணம் வரவில்லை.

கடந்த டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த இந்த இரண்டு மிகப் பெரிய இயற்கைப் பேரிடர்களுக்கும் ஒன்றிய அரசிடமிருந்து நிவாரணத் தொகையாக தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 37,907.19 கோடி ரூபாயைக் கோரியுள்ளது. இது சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 19,692.67 கோடி ரூபாயும், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளுக்கான மறுகட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக 18,214.52 கோடி ரூபாயும் உள்ளடக்கியதாகும்.

பிரதமர் அவர்களிடம் டெல்லி சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கை இது. கடந்த டிசம்பர் 19ஆம் தேதி அன்று இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. கோரிக்கை வைத்து மூன்று வாரங்கள் ஆகப் போகிறது. ஒன்றிய நிதி அமைச்சர் இங்கு வந்து பார்த்துச் சென்றார். அவரிடமும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஒன்றியக் குழு மூன்று நாட்கள் தங்கி ஆய்வை நடத்தியது. அவர்களிடமும் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை வைத்தார். ஒன்றிய உள்துறை அமைச்சரைச் சந்தித்து 13 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் குழுவினர் கோரிக்கை வைக்க இருக்கிறார்கள். ஒன்றிய அரசிடம் இருந்து பணம் வரும் நாளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் - மக்களுக்குப் பணத்தை வாரி வழங்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

**"வெள்ள நிவாரணமாக 6 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் அய்யா கொடுத்துட்டாங்க. மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் வந்திருச்சு. இப்ப பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய் கிடைச்சிருச்சு. மொத்தம் 8 ஆயிரம் ரூபாயை எங்க அண்ணன் மாதிரி முதலமைச்சர் அய்யா கொடுத்திருக்காங்க. இந்த பொங்கலுக்கு யார் தயவும் எனக்குத் தேவையில்லாம முதலமைச்சர் கொடுத்த பணத்திலயே பொங்கலைக் கொண்டாடிடுவேன்"** என்று ஒரு பெண் அளித்துள்ள பேட்டி என்பது, முதலமைச்சர் அவர்களின் கருணையுள்ளத்தை அளவிடுவதாக அமைந்துள்ளது.

**"உங்கள் வீட்டுக்கு விளக்காவேன்.**

**நாட்டுக்குத் தொண்டனாவேன்.**

**மக்களுக்காகக் கவலைப்படும் தலைவனாக இருப்பேன்.**

**மக்கள் கவலைகளைத் தீர்ப்பதில் முதல்வனாவேன்!"** - என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தலுக்கு முன்பு சொன்னார்கள். முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்து அதன்படி நடந்து வருகிறார்கள். கோடிக்கணக்கான தமிழ்மக்கள் சார்பில் முதலமைச்சரை வாழ்த்துவோம்! வாழ்க! வாழ்கவே!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், 'வேர்களை தேடி' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் பண்பாட்டு சுற்றுலா மேற்கொண்ட ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அயலகத் தமிழ் மாணவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.




முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில், 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து, அயலகத் தமிழர்கள் அளித்த நன்கொடைகளை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா. சண்முகம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை துணை அமைச்சர் எம். குலசேகரன், இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டு முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, Zoom Technology தலைவர் வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கல்வி - பண்பாடு - தொழில் என பல்வேறு தளங்களில்

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயனளிக்கும்!

## சிங்கப்பூர் அமைச்சர் கே.சண்முகம் சந்திப்பு குறித்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, ஜன.13-

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் 'தமிழ் வெல்லும்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெறும் "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவை நேற்று முன்தினம் (11.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அயலகத் தமிழர் தின விழாவின் இரண்டாவது நாளான நேற்று (12.1.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, 'எனது கிராமம்' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள வருகை தந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2024) முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்.

*இச்சந்திப்பு தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-*

**சென்ற ஆண்டு சிங்கப்பூர் பயணத்தின்போது நான் விடுத்த அழைப்பை ஏற்று, அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்கத் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் அவர்களை எனது இல்லத்தில் வரவேற்று மகிழ்ந்தேன்.**

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-இன் வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்றுள்ள எங்களின் இந்தச் சந்திப்பு கல்வி - பண்பாடு - தொழில் எனப் பல்வேறு தளங்களில் வளர்ந்து, நாட்டுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பயனளிக்கும் என நம்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### உலக வாழ் தமிழர்களுக்காக

# அயலகத் தமிழர் தின விழாவைக் கொண்டாடிய முதல்வருக்கு நன்றி!

## சென்னையில் சிங்கப்பூர் சட்ட அமைச்சர் கே.சண்முகம் பேச்சு!

*சென்னை, ஜன. 13 -*

உலக வாழ் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் தின விழாவைக் கொண்டாடிய தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி என சென்னையில் நடைபெற்ற விழாவில் பேசிய சிங்கப்பூர் சட்ட அமைச்சர் கே.சண்முகம் தெரிவித்தார்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விழா தமிழ் வெல்லும் என்னும் கருப்பொருளில் அயலகத் தமிழர் தின விழாவில் சிங்கப்பூர் உள்துறை சட்டத்துறை அமைச்சர் கே.சண்முகம் பேசியதாவது:

சிங்கப்பூரைப் போல் அனைத்து நாடுகளும் தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் தின விழாவை கொண்டாட நடவடிக்கை எடுத்த முதலமைச்சருக்கு எனது நன்றி.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினால் சிங்கப்பூர் தமிழ்நாட்டுக்கு இடையே நல்லுறவு ஏற்பட்டுள்ளது.

உலகின் மூத்த மொழி தமிழ்மொழி தமிழ் மொழியின் பெருமை உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது முத்தமிழறிஞர் கலைஞரின் பராசக்தி வசனம் இன்றும் பேசப்படுகிறது. சிங்கப்பூர் அமைச்சர் சண்முகம் முத்தமிழறிஞர் கலைஞரைப் போல் யாராலும் பேசவும், எழுதவும் முடியாது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றி வருகிறது. முதலீடுகளை ஈட்டுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டின் ஜி.டி.பி. உற்பத்தி 400 மில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் வெற்றி நடைபோட்டால், அயலகத் தமிழர்கள் பெருமையடைவர்.



சிங்கப்பூரில் தமிழ் பேசும் மக்கள் 5 லட்சம் பேர் வசிக்கின்றனர். சிங்கப்பூர் பள்ளிகளில் தமிழ் மொழி பாடமாக உள்ளது. சிங்கப்பூர் பள்ளி, கல்லூரிகள், நீதிமன்றம், நாடாளுமன்றத்தில் தமிழ் மொழி காணப்படுகிறது சிங்கப்பூரைப் போல் அனைத்து நாடுகளும் தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும் .

இவ்வாறு சிங்கப்பூர் அமைச்சர் கே.சண்முகம் பேசினார்.

### புதுடெல்லியில் - ஒன்றிய அரசைக் கண்டித்து

# 'இந்தியா' கூட்டணி மாணவர் அமைப்பு பேரணி!

## தி.மு.க. சார்பில் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*புதுடெல்லி, ஜன.13 -*

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக்கொள்கையை கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகளின் மாணவர் அமைப்பு சார்பில் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடைபெற்றது.

இந்தியா கூட்டணியில் உள்ள காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி கட்சி, சமாஜ்வாடி கட்சி, இடதுசாரிகள், ராஷ்ட்ரிய ஜனதா தள் ஆகிய கட்சிகளின் மாணவர் அமைப்புகள் தற்போது ஒன்றாக இணைந்து, United Students of India என்ற அமைப்பை உருவாக்கி உள்ளன. இந்த அமைப்பின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேசிய கல்விக் கொள்கையை கண்டித்து டெல்லியில் நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடைபெற்றது. கல்வியைக் காப்பாற்ற தேசிய கல்விக் கொள்கையை நிராகரியுங்கள்; இந்தியாவைக் காப்பாற்ற, பா.ஜ.க.வை நிராகரியுங்கள் என்ற முழக்கத்துடன் நாடாளுமன்றம் நோக்கி இந்த பேரணி நடைபெற்றது. டெல்லி ஜந்தர் மந்தரில் இருந்து நாடாளுமன்றம் நோக்கி நடைபெற்ற இந்த பேரணியில் காங்கிரஸ், தி.மு.க உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் மாணவர் அமைப்பினர் பங்கேற்று ஒன்றிய அரசின் தேசிய கல்வி கொள்கைக்கு எதிராகவும், நீட் தேர்விற்கு விலக்கு அளிக்க வலியுறுத்தியும் முழக்கங்கள் எழுப்பினர்.

தி.மு.க மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் உள்ளிட்ட பலர் பங்கேற்று முழக்கங்கள் எழுப்பினர்.

## கொளத்தூர் தொகுதியில் சமத்துவப் பொங்கல் விழா!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசுப் பொருட்கள் வழங்கினார்!

## பொதுமக்கள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

**சென்னை, ஜன.13–**

**தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களுடன் தனது தொகுதியான கொளத்தூர் தொகுதியில் மக்களுடன் இணைந்து பொங்கல் வைத்து கொண்டாடினார். மேலும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு பொங்கல் திருநாளை முன்னிட்டு நலத்திட்டப் பொருட்களை வழங்கி பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

**இதுபற்றிய விவரம் வருமாறு:–**

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பரிசுத் தொகுப்பு வழங்குவது வழக்கம். அதன்படி, இந்தாண்டும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000 ரொக்கப் பணம் ஆகியவை கொண்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2024) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சமத்துவ பொங்கல் கொண்டாடினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

அதன்படி 10.01.2024 அன்று காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரூ.1000 வழங்கி இத்திட்டத்தினைத் துவக்கி வைத்தார். இத்திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் உள்ள 2 கோடிக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பெரும் மகிழ்ச்சி அடைந்து முதல்வர் அவர்களுக்கு தொடர்ந்து நன்றி தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.01.2024) மாலை கொளத்தூர் தொகுதியில் மனைவி துர்கா ஸ்டாலினுடன் சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்றார்.

தனது கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் தொகுதி மக்களுடன் இணைந்து பொங்கல் வைத்து விழாவை கொண்டாடினர்.

இதில் கொளத்தூர் தொகுதி மக்கள், மாணவியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த சமத்துவ பொங்கல் நிகழ்வில் அனைத்து மதத்தைச் சேர்ந்த பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் பொங்கல் வைத்து மகிழ்ந்து இவ்விழாவில் பங்கேற்ற அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பொங்கல் வழங்கி பொங்கல் வாழ்த்து தெரிவித்தனர்.

**பொங்கல் பரிசுப் பொருள்கள்!**

அத்துடன் இந்த பொங்கல் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1000–க்கும் மேற்பட்ட மாணவியர் மற்றும் மகளிருக்கு பொங்கல் பரிசுப் பொருள்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்த பரிசு பொருள்களில் வேட்டி, சேலை, பொங்கல் வைப்பதற்கான பொருள்கள் உள்ளிட்டவை இடம் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி அலுவலகம் அருகே உள்ள அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பூக்கோலமிட்டு உற்சாகமாக வரவேற்றனர்.

முன்னதாக அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் புதுப்பானையில் பச்சரிசி இட்டு அங்கு பயிலும் மாணவிகளுக்கு முதல்வர் அவர்களும், அவரது மனைவி துர்கா ஸ்டாலின் அவர்களும் பொங்கல் பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட மாணவிகள் முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

**2,100 பேருக்கு பொங்கல் பரிசுப் பொருட்கள்!**

அதேபோல் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர் பாபு ஏற்பாட்டில் டான்போஸ்கோ பள்ளியில் 2 ஆயிரத்து 100 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொங்கல் விழாவில், மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் தி.மு.க. பகுதி நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசுப் பொருட்களை வழங்கினார்.

முன்னதாக, பொங்கல் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்கச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறமும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது முதலமைச்சரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரு. கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், துணை மேயர் மு. மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி நிர்வாகிகள் திருமதி ஹெலன் மற்றும் நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## “அயலகத் தமிழர் தினம் - 2024” விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஆனால், தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றம் காரணமாக, இந்த முயற்சிகளில் தடை ஏற்பட்டது. ஆனால், இப்போது அமைந்திருக்கின்ற நம்முடைய திராவிட மாடல் அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னபடியே, அயலகத் தமிழர் நலனுக்கென்று தனியாக ஒரு துறையை உருவாக்கி, தனி அமைச்சரையும் நியமித்து, உங்களுடைய அவசரத் தேவைகள் உடனுக்குடன் சிறப்பான முறையில் தீர்த்து வைக்கப்பட்டு வருகிறது.

**சிறப்பாகச் செயல்படும் ‘அயலகத் தமிழர் நலவாரியம்’!**

ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்களைக் கொண்ட ‘அயலகத் தமிழர் நல வாரியம்’ அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையும், வாரியமும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள்.

- வெளிநாடுகளில் நிரந்தரக் குடியுரிமை உள்ள தமிழர்களுடைய குழந்தைகளுக்கு தமிழ் மீது ஆர்வத்தை உருவாக்கி, தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாக தமிழ் கற்றுத் தரப்படுகிறது.

வெளிநாடுகளில், கைது செய்யப்படுகின்ற சூழலுக்கு ஆளாகின்ற தமிழர்களுக்கு உரிய சட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அயல்நாடுகளில் உதவி தேவைப்படுகின்ற தமிழர்களுக்கு ஒன்றிய அரசின் வெளியுறவு அமைச்சகம் மற்றும் தொடர்புடைய இந்தியத் தூதரகத்துடன் இணைந்து உரிய நிவாரண நடவடிக்கைகளை இந்தத் துறை சிறப்பாகச் செய்து வருகிறது.

- மருத்துவ இயலாமை மற்றும் பல்வேறு காரணங்களால் தாயகம் திரும்ப முடியாமல் கஷ்டப்படுகின்ற தமிழர்களை தாய்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வரவும், அங்கு இறக்க நேரிடும் தமிழர்களின் உடல்களை இந்தியா கொண்டு வரவும், தமிழ்நாடு அரசால் 1 கோடி ரூபாய் சுழல்நிதி ஏற்படுத்தப்பட்டு, தமிழர்களுடைய துயரங்களைத் துடைக்கின்ற பணி உரிய முறையில் செய்யப்பட்டு வருகிறது.
- முகவர் மீதான புகார், நில அபகரிப்புப் புகார் தொடர்பான 53 இனங்களில் தீர்வு காணப்பட்டிருக்கிறது.
- பாதுகாப்பான புலம் பெயர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் தொழிற் கல்வி நிலையங்களில், விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

அயல்நாட்டில் வசிக்கின்ற நம்முடைய தமிழர்கள், இங்கு இருக்கின்ற அவர்களுடைய குடும்பத்தினர் எதிர்கொள்ளுகின்ற நிலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளைக் களைய, டி.ஜி.பி. அலுவலகத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

- அயல்நாடுகளுக்குச் செல்கின்ற தமிழர்களுக்கு, அந்த நாடுகளின் சட்டம், பண்பாடு மற்றும் மொழி தொடர்பான குறைந்தபட்சப் புரிதலை உருவாக்க, சென்னையில், முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம் செயல்பட்டு வந்தது. இப்போது, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, பெரம்பலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும் இந்த மையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
- உக்ரைன், சூடான், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர் என்று பல்வேறு நாடுகளில் இருக்கின்ற நம்முடைய தமிழர்கள் அங்கு எதிர்பாராத விதமாக பிரச்சினைகளைச் சந்திக்கின்றபோது, தமிழ்நாடு அரசு விரைவாகச் செயல்பட்டு பத்திரமாக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறது.
- அயல்நாடுகள் மட்டுமில்லாமல், மணிப்பூர் கலவரம், அமர்நாத் பனிச்சரிவு போன்ற இந்தியாவின் பிற மாநிலங்களில் ஏற்படுகின்ற இயற்கை இடர்ப்பாடு மற்றும் அசாதாரண சூழ்நிலைகளிலும் தமிழர்களைப் பாதுகாப்பாக மீட்பதில் கண்ணும் கருத்துமாக நாங்கள் செயல்பட்டதை நீங்களே பார்த்தீர்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த “எனது கிராமம்” திட்டம் துவங்கப்பட்டிருக்கிறது.

**அரசு நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏதுவான சூழல்!**

வெளிநாடு வாழ் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய சேமிப்பை தமிழ்நாட்டில் பாதுகாப்பாக முதலீடு செய்ய ஆர்வத்துடன் இருக்கிறார்கள். இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, இவர்கள் முதலீடுகள் அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்ய ஏதுவான சூழலையும் உருவாக்கி இருக்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் அயலகத் தமிழர் நாளாகக் கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக சிறப்பாக தொடர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**தமிழ் அன்னையின் குழந்தைகள்! அந்த உரிமையுடன் உங்கள் சகோதரனாக நான் உங்களிடம் வைக்கின்ற வேண்டுகோள்... எங்கு வாழ்ந்தாலும் தாய்த்தமிழ் நாட்டை மறக்காதீர்கள்! அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டிற்கு வாருங்கள்! கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்! தமிழோடு இணைந்திருங்கள்! நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், நமது திராவிட மாடல் அரசுக்கும் துணையாக இருந்திடுங்கள்!**

கடந்த இரண்டு நாட்களாக, உலகத் தமிழினத்தின் மாநாடு போல சீரும் சிறப்புமாக இது நடந்துகொண்டு வருகிறது. “வேர்களைத் தேடி” என்பது இந்த ஆண்டுக்கான முத்தாய்ப்பான திட்டமாக அமைந்திருக்கிறது. ஆண்டுதோறும் 200 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து பண்பாட்டுச் சுற்றுலா அழைத்துக்கொண்டு செல்வதற்கு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 58 இளைஞர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து, டிசம்பர் 27ஆம் தேதி முதல் ஜனவரி 10ஆம் தேதி வரை 15 நாட்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கலை, இலக்கியம், பண்பாடு, பழம்பெரும் கட்டடம், வணிகம், விடுதலைப் போராட்டத்தில் நம்முடைய பங்கேற்பு, ஆடைகள் தயாரித்தல், அணிகலன் செய்தல் என்று தமிழர்களின் அனைத்து மாண்புகளையும் பார்த்துக் கொண்டு வந்து, அவர்களுடைய அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொண்டார்கள். இதில் இந்தத் திட்டத்தின் வெற்றியை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

**நாம் எல்லோரும் – ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!**

இந்த ஆண்டின் அயலகத் தமிழர் நாள் கொண்டாட்டம் “தமிழ் வெல்லும்” என்ற சிறப்பான கருப்பொருளைக் கொண்டு, மிக எழுச்சியோடும், 50க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் இருந்து வந்திருக்கின்ற உங்கள் எல்லோருடைய பங்கேற்போடும் மிகச் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமில்லாமல், ஒரு தமிழனாகவும் இதைப் பார்த்து நான் அகம் மகிழ்கிறேன். நீராலும், நிலத்தாலும் ஏன் நாடுகளாலும், கண்டங்களாலும் பிரிந்து இருந்தாலும் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்!

**திராவிட மாடல் அரசுக்கு துணையாக இருந்திடுங்கள்!**

தமிழ் அன்னையின் குழந்தைகள்! அந்த உரிமையுடன் உங்கள் சகோதரனாக நான் உங்களிடம் வைக்கின்ற வேண்டுகோள்... எங்கு வாழ்ந்தாலும் தாய்த்தமிழ் நாட்டை மறக்காதீர்கள்! அடிக்கடி உங்கள் குழந்தைகளோடு தமிழ்நாட்டிற்கு வாருங்கள்! கீழடி, பொருநை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்! தமிழோடு இணைந்திருங்கள்! நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், நமது திராவிட மாடல் அரசுக்கும் துணையாக இருந்திடுங்கள்! என்று கேட்டு, அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்நாடு!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு – 169, சின்னமலை, எல்.டி.ஜி. சாலையில் உள்ள புனித தோமையார் சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற ‘மக்களுடன் முதல்வர்’ சிறப்பு முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (12.01.2024) தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தென் சென்னை நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பா.ஜ.க. வின் பாச வலையிலிருந்து

# அ.தி.மு.க. விரிக்கும் மோச வலையை சிறுபான்மை மக்கள் நம்ப மாட்டார்கள்!

### ‘நியூஸ் 18’ செய்திகள் தொலைக்காட்சி ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் - ‘தீக்கதிர்’ சிறப்பாசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் வாதம் !

**சென்னை,ஜன.13 -**

**தீக்கதிர் சிறப்பாசிரியர் மதுக்கூர் இராமலிங்கம் நியூஸ் 18 செய்திகள் தொலைக்காட்சியின் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில் பங்கேற்று முன்வைத்த கருத்துகள் வருமாறு:**

அண்மையில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் என்ற பட்டமும் கொடுத்து, ஒரு வீர வாளையும் கொடுத்தார்கள். அந்த வாள் மதச்சார்பின்மையை வெட்டி வீழ்த்திய வாள் ஆகும்.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது குஜராத் மோடி அரசைப் பின்பற்றி மதமாற்றத் தடைச் சட்டம் மற்றும் ஆடுகோழி பலியிடத் தடைச் சட்டம் கொண்டுவந்தார். தேர்தல் தோல்விக்குப் பிறகு அந்தச் சட்டங்களை திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பது நேற்றைய வரலாறு.

அயோத்தியில் பாபர் மசூதியை இடிக்க கரசேவகர்களை ஜெயலலிதா அனுப்பிவைத்தார் என்று பா.ஜ.க.வைச் சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி கூறியது மறந்துவிடக் கூடியதல்ல. இராமருக்கு அயோத்தியில் கோவில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது என்று ஏகடியம் பேசியவர் தான் ஜெயலலிதா.

ஒரு நிலையில், பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது நான் செய்த தவறு. இனி அந்தத் தவறைச் செய்யமாட்டேன் என்றார் ஜெயலலிதா. அவருடைய மறைவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த எடப்பாடி பழனிசாமியின் அமைச்சர்கள் மோடி எங்கள் டாடி என்று கொஞ்சிக் குலாவினார்கள்.

பழைய கதை இருக்கட்டும். பில்கிஸ் பானு கும்பல் பாலியல் வல்லுறவுக் குற்றவாளிகளை குஜராத் பா.ஜ.க. அரசு முன் விடுதலை செய்ததை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. குஜராத் பா.ஜ.க. அரசு செய்தது அப்பட்டமான பிராடு என உச்சநீதிமன்றம் ஓங்கிக் குட்டியுள்ளது. பில்கிஸ் பானு நீதிக்காக நடத்திய நெடிய போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று அறிக்கை விடுத்துள்ளார்.

**ஆனால், பா.ஜ.க.வுடன் இனி எப்போதும் கூட்டு இல்லை என்று ஊர் ஊராகச் சென்று சத்தியம் செய்யும் எடப்பாடி பழனிசாமி இது பற்றி மூச்சுவிட மறுப்பதேன்? பழைய பாசமா அல்லது பயமா?**

**ஒருவேளை, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.விற்கு தப்பித் தவறி ஒன்றோ, இரண்டோ இடம் கிடைத்தால் ஒன்றியத்தில் யார் ஆட்சியமைக்க அதிமுக ஆதரவளிக்கும் என எடப்பாடி பழனிசாமி சொல்லத் தயாரா? தமிழ்நாட்டிலும் புதுவையிலும் அந்தக் கட்சிக்கு ஒரு இடம் கூடக் கிடைக்கப்போவதில்லை. எனவே, அந்தக் கவலை எங்களுக்கு இல்லை என்று அ.தி.மு.க. நினைக்கிறதா?**

‘குடியுரிமை திருத்தச் சட்டத்தை கூட்டணி தர்மத்திற்காக ஆதரித்து விட்டோம். அது தவறு தான. இனி அந்தத் தவறை செய்யமாட்டோம்’ என்று பாவமன்னிப்புக் கேட்கிறார் பழனிசாமி. நாடாளுமன்ற மாநிலங்களவையில் அ.தி.மு.க. அந்தச் சட்டத்தை ஆதரித்ததால் தான் அது நிறைவேறியது. அந்தப் பாவத்திற்கு அதிமுகவும் பொறுப்பேற்க வேண்டும். சிறுபான்மை இஸ்லாமிய மக்களுக்கு மட்டுமல்ல, ஈழத் தமிழர்களுக்கும் இந்தச் சட்டத்தை ஆதரிப்பதன் மூலம் இரட்டைத் துரோகம் செய்தது அதிமுக.

‘நாடாளுமன்றத்தில் ஆதரித்தது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தால் யாருக்குப் பாதிப்பு?’ என்று அப்போது முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி நியாயப்படுத்தினார். குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் சிறுபான்மை இஸ்லாமிய மக்கள் ஷாகின் பாக் அமைத்துப் போராடினார்கள். சென்னை வண்ணாரப்பேட்டையில் அமைதியாகப் போராடியவர்கள் மீது கொடூரத் தடியடி நடத்தியது எடப்பாடி பழனிசாமி ஆட்சிதானே? அது ஒருபுறமிருக்க, இப்போது கூட ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா குடியுரிமை திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டோம். இப்போது நடைமுறைப்படுத்தப் போகிறோம் என மிரட்டுகிறாரே, இதை நடைமுறைப்படுத்தவிட மாட்டோம் என அறிக்கை விட எடப்பாடி பழனிசாமியைத் தடுப்பது எது?

கொரோனா கொடுங்காலத்தில் அந்தக் கொடிய நோயை இஸ்லாமிய மக்களோடு இணைத்து விஷமப் பிரச்சாரம் செய்தது யார்? தில்லியில் நடைபெற்ற தப்லீக் ஜமாஅத் மாநாட்டில் பங்கேற்ற முஸ்லிம்களால் தான் கொரோனா பரப்பப்பட்டது என ஒன்றிய மோடி அரசு பொய் பரப்பியது. தமிழ்நாட்டில் “சிங்கிள் சோர்ஸ்” என இதை அழைத்து அன்றாடம் பேட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சியில் தானே.



**மதுக்கூர் ராமலிங்கம்**
சிறப்பாசிரியர்
‘தீக்கதிர்’ நாளிதழ்

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்டெ யின்ஸ் பாதிரியார் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலேயே மரணமடைந்த போது மோடி ஆட்சியை அ.தி.மு.க. கண்டித்ததா? ஜம்மு காஷ்மீரில் ஆசிபா என்ற சிறுமி கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு மத வெறியர்களால் கொல்லப்பட்டதை அ.தி.மு.க. கண்டித்ததா? மாட்டிறைச்சியின் பெயரால் சிறுபான்மை மற்றும் தலித் மக்கள் கொல்லப்பட்டபோது அ.தி.மு.க. கண்டித்ததுண்டா? அதெல்லாம் போகட்டும், மணிப்பூரில் கிறிஸ்தவ குக்கி இன மக்கள் இரட்டை எஞ்சின் ஆட்சிகளின் ஆசியோடு படுகொலை செய்யப்பட்டார்கள். பெண்களை நிர்வாணப்படுத்தி, நடு ரோட்டில் இழுத்து வந்து கும்பல் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினார்கள். பிரதமர் மோடி இப்போது வரை மணிப்பூர் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. நாடாளுமன்றத்தில் திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் இதற்காகப் போராடின. ஆனால், அ.தி.மு.க., பா.ஜ.க.வைக் கண்டு பதுங்கியது, பம்மியது.

**பாஜக கூட்டணியில் நாங்கள் இல்லை. எங்களுக்குக் கொள்கை முக்கியம் என்கிறாரே எடப்பாடியார். நாடாளுமன்றத்திற்கே பாதுகாப்பில்லாமல் அத்துமீறி இருவர் நுழைந்து புகைக் குண்டுகளை வீசிய போது மோடி அரசை அ.தி.மு.க. கண்டித்ததா? இதை எதிர்த்துப் போராடிய தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 146 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டபோது அ.தி.மு.க. கண்டித்ததா?**

மோடி ஆட்சியின் மோசமான கொள்கைகளை எதிர்த்து நாங்கள் கூட்டணியை விட்டு வெளியேறுகிறோம் என்று கூறும் திராணி அ.தி.மு.க.விற்கு இல்லை. மாறாக, மோடி ஆட்சியைப் பற்றி ஒரு வார்த்தை கூட கண்டிக்க இவர்கள் தயாராக இல்லை. இவர்களை நம்ப தமிழ்நாட்டு மக்களும் தயாராக இல்லை.

சிறையில் உள்ள இஸ்லாமியர்களை விடுவிக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு திமுக அரசு அனுப்பியது. முக்கியமான மசோதாக்களை ஆளுநர் முடக்கி வைத்திருப்பதை உச்சநீதிமன்றம் கண்டித்தது. இதற்கான வழக்கை மாநில திமுக அரசு தொடுத்தது. தமிழ்நாட்டிற்கு அனைத்து வகையிலும் எதிராக உள்ள இப்போதைய ஆளுநரோடு அதிமுக இணக்கமாக உள்ளது. இஸ்லாமிய சிறைவாசி களை விடுவிக்கக் கோரும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென ஆளுநரைச் சந்தித்து அழுத்தம் கொடுக்க அதிமுக தயாரா?

இஸ்லாமிய சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுகள் முன்வந்தபோது மத ரீதியாக இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என நீதிமன்றம் தடுத்தது. கலைஞர் முதல்வராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக இஸ்லாமியருக்கு 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கினார். அதனால் தான் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீடு நிலை நிறுத்தப்பட்டது. மதம் மாறிய தலித் கிறிஸ்தவர்களுக்கும் தலித் மக்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கவேண்டுமென திமுக அரசு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளது. இந்தப் பிரச்சனையில் அ.தி.மு.க. துரும்பை யாவது கிள்ளிப் போட்டது உண்டா?

பசிப் பிணி போக்கும் காலை உணவுத்திட்டத்தை சிறுபான்மை மதத்தினர் நடத்தினர் நடத்தும் கல்வி நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப் போவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அத்துடன் சிறுபான்மையினர் நலன் பேணும் 17 அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உண்மையில் பா.ஜ.க. பாசத்திலிருந்து அ.தி.மு.க. விலகவில்லை. அவர்களே இது “நேச்சுரல் அலையன்ஸ்” என்று முன்பு கூறியிருக்கி றார்கள். அ.தி.மு.க. தேர்தலுக்காக போடும் நாடகத்தை சிறுபான்மை மக்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் நம்பமாட்டார்கள் என்பது உறுதி.

இவ்வாறு அவர் கூறினார்.

---

## அயோத்தி ராமர் கோயிலை வைத்து மக்களவைத் தேர்தலுக்காக

# ஒன்றிய அரசு அரசியல் செய்கிறது - சித்தராமையா குற்றச்சாட்டு!

### ‘தினகரன்’ தலையங்கத்தில் கருத்து!

*சென்னை, ஜன. 13 -*

*ஒன்றிய பா.ஜ.க. அரசு அயோத்தி ராமர் கோயிலை வைத்து மக்களவைத் தேர்தலுக்காக அரசியல் செய்கிறது; 140 கோடி மக்களையும் ஒன்றிய அரசு அவமதித்துவிட்டது என கர்நாடக முதல்வர் சித்தராமையா குற்றம் சாட்டியுள்ளதாக ‘தினகரன்’ நாளேடு 12.01.2024 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுடுள்ளது.*

*அத்தலையங்கம் வருமாறு:-*

*ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு தங்கள் கட்சி ஆட்சி அல்லாத மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துவது மட்டுமின்றி மறைமுக அரசியல் சதி வேலையில் ஈடுபடுகிறது. கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து சித்தராமையா தலைமையிலான ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்று பல்வேறு சூழ்ச்சிகளில் மாநில பா.ஜ.க. தலைமை ஒன்றிய அரசின் துணையுடன் அரங்கேற்றி வருகிறது.*

*கர்நாடக மாநிலத்தில் இவ்வாண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால் 230 தாலுகாக்கள் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. இதை வறட்சிப் பகுதிகள் என்று அரசு அறிவித்து ஒன்றிய குழு நேரிடையாக பார்வையிட்டுச் சென்ற பிறகும் இது வரை வறட்சி நிவாரண நிதியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. பிரதமர் மோடியை முதல்வர் சித்தராமையா நேரில் சந்தித்து வலியுறுத்தியும் எந்த பயனும் இல்லை. உத்தரவாதத் திட்டங்களை செயல்படுத்த அரசிடம் நிதி இருக்கிறது. வறட்சி பாதித்த பகுதிகளில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நிதி இல்லையா என்று மாநில பா.ஜ.க. கேள்வி எழுப்பி அரசியல் செய்கிறது. ஆனால் 25 பா.ஜ.க. எம்.பி.க்களில் ஒருவர் கூட ஒன்றிய அரசிடம் நிவாரணம் பெற்றுத்தர முன்வராதது ஏன் என்று காங்கிரஸ் கேள்வி எழுப்புகிறது.*



தினகரன்
ஜனவரி 12, 2024 வெள்ளிக்கிழமை

ஒன்றாத அரசு

ஒன்றியத்தில் ஆளும் பாஜ அரசு தங்கள் கட்சி ஆட்சி அல்லாத மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துவது மட்டுமின்றி மறைமுக அரசியல் சதி வேலையில் ஈடுபடுகிறது. கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து சித்தராமையா தலைமையிலான ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்று பல்வேறு சூழ்ச்சிகளில் மாநில பாஜ தலைமை ஒன்றிய அரசின் துணையுடன் அரங்கேற்றி வருகிறது.

கர்நாடக மாநிலத்தில் இவ்வாண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால் 230 தாலுகாக்கள் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. இதை வறட்சி பகுதிகள் என்று அரசு அறிவித்து ஒன்றிய குழு நேரிடையாக பார்வையிட்டு சென்ற பிறகும் இதுவரை வறட்சி நிவாரண நிதியை ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. பிரதமர் மோடியை முதல்வர் சித்தராமையா நேரில் சந்தித்து வலியுறுத்தியும் எந்த பயனும் இல்லை. உத்தரவாத திட்டங்களை செயல்படுத்த அரசிடம் நிதி இருக்கிறது. வறட்சி

*இந்நிலையில் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு கர்நாடகாவில் இருந்து யாருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. கர்நாடகாவில் ராமர், அனுமன் வழிபாடு பிரசித்தி பெற்றது. அனுமன் பிறந்த இடமாக கர்நாடகாவும் கருதப்படுகிறது. ஒன்றிய அரசு அயோத்தி ராமர் கோயிலை வைத்து மக்களவை தேர்தலுக்காக அரசியல் செய்கிறது என்று குற்றம்சாட்டிய சித்தராமையா, 140 கோடி மக்களையும் ஒன்றிய அரசு அவமதித்துவிட்டது. அயோத்தி கோயில் இந்துக்கள், ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு மட்டுமே சொந்தமானது போன்று பா.ஜ.க. சித்தரிக்கிறது.*

*நாடாளுமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு முழுமையாக கட்டி முடிக்கப்படாத கோயிலை பா.ஜ. திறப்பது வெறும் அரசியல் தான். இவ்விழாவை புறக்கணிப்பதாக காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, கார்கே உள்ளிட்டோர் முடிவெடுத்துள்ளதை வரவேற்கிறேன் என குறிப்பிட்டுள்ளார். இதே போன்று துணை முதல்வர் டி.கே.சிவகுமார் ராமர் கோயில் திறப்பு விழாவின் போது கர்நாடக அறநிலையத்துறை சார்பில் அனைத்து கோயில்களிலும் சிறப்பு பூஜை, வழிபாடு நடத்தப்படும் என்று தெரிவித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பா.ஜ.வினர், ராமர் கோயில் திறப்பு விழாவில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே காங்கிரஸ் இது போன்று அறிவித்துள்ளது என்று குற்றம்சாட்டியுள்ளனர்.*

*கர்நாடக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் காங்கிரஸ் அரசு கவனம் செலுத்தாமல் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு ஒன்றிய அரசை குறை சொல்வதிலேயே காலம் கடத்தி வருகிறது என்ற பா.ஜ. விமர்சித்து வருகிறது. ஆனால் எத்தனை முறை கேட்டாலும் வறட்சி நிவாரண நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு இழுத்தடிக்கிறது. காங்கிரஸ் ஆளும் மாநிலங்களுடன் ஒன்றாமல் இருக்கும் ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது. குடியரசு தினவிழாவில் கர்நாடக மாநிலம் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட அணிவகுப்பு ஊர்திக்கு அனுமதி மறுத்துள்ளது. இது குறித்து பா.ஜ. தலைவர்களோ, எம்.பி.க்களோ கேள்வி எழுப்பாமல் காங்கிரஸ் அரசிடம் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே குறியாக உள்ளனர். இவர்களின் அரசியல் நாடகத்துக்கு மக்களவை தேர்தலில் வாக்காளர்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று முதல்வர் சித்தராமையா கடுமையாக சாடியுள்ளார்.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.*

---

## கடலூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.ஆர். தனஞ்செயன் துணைவியார் செல்வி மீனாட்சி மறைவு!

### அமைச்சர் எம் .ஆர் .கே. பன்னீர்செல்வம் - கழக முன்னணியினர் நேரில் அஞ்சலி!

*கடலூர், ஜன.13 -*

*கடலூர் கிழக்கு மாவட்டம், கடலூர் வடக்கு ஒன்றியம், குண்டு உப்பலவாடி ஊராட்சி கண்டகாடு கிராமத்தைச் சேர்ந்த கழக வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.தனஞ்செயன் துணைவியார் தா.செல்வி என்கிற மீனாட்சி நேற்று முன்தினம் உடல் நலம் இன்றி மறைவெய்தினார்.*

*இவருக்கு த.விக்னேஷ், த.கதிரவன் ஆகிய இரண்டு மகன்கள் உள்ளனர்.*

*தகவல் அறிந்த கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி மற்றும் மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கடலூர் மாநகரக் கழகச் செயலாளர் கே.எஸ். ராஜா மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், நேரில் சென்று அம்மையாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செங்குன்றம் மிசா இரா. ஏழுமலை
### சனவரி 13 (2005)



**கழக துவக்கக் காலத்திலிருந்தே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், கழகப் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.**

**நாரவாரிக்குப்பம் பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும் – பேரூராட்சித் தலைவராகவும் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்ற இவர், நெருக்கடிக் காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**“சட்டமன்றத்தில் இடம் கிடைக்காவிட்டாலும், கலைஞர் இதயத்தில் எப்பொழுதும் ஏழுமலை அவர்களுக்கு இடமுண்டு.” என்று பொதுச்செயலாளர் பேராசிரியரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தலைமைக் கழக அறிவிப்பின்படி இன்று (13.01.2024 - சனிக்கிழமை) வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

அதுசமயம், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மருத்துவ அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய கழக சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

# விடுமுறை நாட்களுக்குப் பிறகு பத்திரப்பதிவுகளுக்கு கூடுதல் டோக்கன்!

### பத்திரப்பதிவுத்துறை அறிவிப்பு!

*சென்னை, ஜன.13 -*

*தைப்பொங்கலை (15.1.2024) அடுத்து வரும் நாட்களில் அதிக அளவில் ஆவணங்கள் பதிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதால் பொங்கலை ஒட்டிய விடுமுறை நாட்கள் முடிந்து அடுத்த வேலை நாளான 18.01.2024 முதல் 31.1.2024 வரையிலான காலத்தில் வரும் அனைத்து வேலை நாட்களிலும் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதலாக பதிவு டோக்கன்கள் வழங்குமாறு வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் ஜோதி நிர்மலாசாமி உத்தரவிட்டுள்ளார்.*

*ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதிலாக 300 டோக்கன்களும் வழங்கப்படும். மேலும் தற்போது வழங்கப்படும் 12 தட்கல் டோக்கன்களின் எண்ணிக்கை 20-ஆக உயர்த்தப்படும்.*

“அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில் -

# அயலகத் தமிழர்களுக்கான விருதுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## ‘எனது கிராமம்’ எனும் முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் ‘தமிழ் வெல்லும்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெற்ற “அயலகத் தமிழர் தினம் 2024” விழாவில் கலந்து கொண்டு தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

**அயலகத் தமிழர் தினம் 2024 விழா**

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை 3வது ஆண்டாக தொடர்ந்து அயலகத் தமிழர் தின விழாவை நடத்தி வருகிறது. இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர் பெருமக்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அயல்நாடுகளில் வசிக்கும் 1400க்கும் மேற்பட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்க பதிவு செய்து உள்ளனர். இதில், 218 சர்வதேச தமிழ் சங்கங்கள் மற்றும் 48 பிற மாநில தமிழ் சங்கங்களைச் சேர்ந்த அயலக தமிழர்கள் பங்கேற்றனர்.

**அயலகத் தமிழர் தின விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள்!**

முன்னதாக, முதல் நாளான நேற்று முன்தினம் (11.1.2024) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் தின விழாவைத் தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட அயலக தமிழர் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்தார். இதில், சிறப்பு நேர்வாக கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

முதல் நாள் விழாவில், சிறப்பு நிகழ்ச்சிகளாக நான்கு கலந்துரையாடல்கள் மற்றும் ஒரு கவிஅரங்கமும், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம. இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் தமிழின் தொன்மை - தொடர்ச்சி குறித்து துறைசார் வல்லுநர்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர். தொடர்ந்து, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில் சிந்து சமவெளி முதல் செயற்கை நுண்ணறிவு வரை - தொலைநோக்குச் சிந்தனை யும் செயலும் என்ற தலைப்பில் கவியரங்கமும் நடைபெற்றது.

மேலும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் தலைமையில் ஒளிரும் எதிர்காலம் - வாய்ப்புகளும் சவால்களும் என்ற தலைப்பிலும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் தலைமையில் வணிகத்தில் தமிழர்கள் - வாய்ப்பும் வளர்ச்சியும் என்ற தலைப்பிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றது.

**‘எனது கிராமம்’ முதலமைச்சர் தொடங்கி வைத்தல்!**

இரண்டாம் நாளான நேற்று (12.1.2024), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘எனது கிராமம்’ என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத்தின் வாயிலாக செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கா. சண்முகம் அவர்கள் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார்.

**‘வேர்களைத் தேடி’ திட்டத்தின் கீழ் தமிழ் அனுபவங்களைப் பகிர்தல்!**

இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக, ‘வேர்களை தேடி’ திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தங்களது பண்பாட்டு சுற்றுலா சென்ற அனுபவங்களை பகிர்ந்தனர்.

**அயலகத் தமிழர்களுக்கான விருதுகள்!**

இவ்விழாவில், தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர் நலன், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட அயலகத் தமிழர்களுக்கான விருதுகள் வழங்கும் விதமாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் சுதாகர் பிச்சைமுத்து அவர்களுக்கும், தமிழ் இலக்கியப் பிரிவில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த சுப்பிரமணியன் தின்னப்பன் மற்றும் அமெரிக்க நாட்டின் திருமதி வைதேகி ஹர்பேர்ட், மருத்துவப் பிரிவில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த ஜெயராம் லிங்கமாணிக்கர், கல்விப் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பால சுவாமிநாதன் மற்றும் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த முருகேசு பரமநாதன், சமூக மேம்பாட்டுப் பிரிவில் மலேசியா நாட்டைச் சேர்ந்த டத்தோ எம். சரவணன், மகளிர் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திருமதி சித்ரா மகேஷ் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி ஜெசிலா பானு, விளையாட்டுப் பிரிவில் தென் கொரியா நாட்டைச் சேர்ந்த ராமன் குருசாமி மற்றும் குவைத் நாட்டைச் சேர்ந்த திருமதி சரண்யா தேவி, வணிகப் பிரிவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பக்கிரிசாமி ராஜமாணிக்கம் மற்றும் மலேசியா நாட்டைச் சேர்ந்த

சையது முகமது சலாவுதீன் ஆகியோருக்கு முதலமைச்சர் அவர்கள் விருதிற்கான தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டு பட்டயம் வழங்கி சிறப்பித்தார்.

**அயலகத் தமிழர் தின விழாவில் இடம் பெற்ற கண்காட்சி அரங்குகள்**

அயலகத் தமிழர் தின விழாவில், தமிழர் நலன், தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகம், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி, சர்வதேச தமிழ் சங்கம் என்ற கருப்பொருள் வாரியாக கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு தமிழர் மரபு மற்றும் பண்பாடுகள் குறித்து விளக்கப்பட்டன.

இதில், தமிழர் நலனை விளக்கும் விதமாக அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் அரங்குகளும், தமிழர் கலை பண்பாடு மற்றும் வணிகத்தை விளக்கும் அரங்குகளும், தமிழின் தொன்மை மற்றும் தொடர்ச்சி குறித்து தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் தொல்லியல் துறை, தமிழ் இணையக் கழகம் ஆகியவற்றின் சார்பில் அரங்குகளும், இலங்கை தமிழ் கலை கண்காட்சி அரங்குகளும், சர்வதேச தமிழ் சங்கங்களால் அமைக்கப்பட்ட அரங்குகளும், தமிழர் மரபு மற்றும் பண்பாடுகளை விளக்கும் வகையில் இடம்பெற்றன.

இவற்றுடன் தமிழ்நாடு அரசு முன்னெடுத்து செயல்படுத்தும் “நான் முதல்வன் திட்டம்” மற்றும் சிப்காட், வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau), டிட்கோ, சிட்கோ உள்ளிட்ட துறைகளின் காட்சி அரங்குகளும் இடம்பெற்றன. சுற்றுலா வளர்ச்சித் துறை மற்றும் பூம்புகார், தமிழ் வளர்ச்சித் துறை, கோஆப்டெக்ஸ், அயலக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாடுகளை விளக்கும் காட்சி அரங்குகளும் இடம்பெற்றன. மேலும், வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்வதற்கான வசதி வாய்ப்புகள் குறித்து விளக்கிட ஸ்டார்ட் அப், டிஎன் ஃபேம் ஆகியவற்றின் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா. சண்முகம், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலேசியா நாட்டு சட்டம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை துணை அமைச்சர்

எம். குலசேகரன், இலங்கை நாட்டின் கிழக்கு மாகாண ஆளுநர் எம். செந்தில் தொண்டமான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மலேசியா நாட்டு முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியன் சதாசிவம், கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இங்கிலாந்து நாட்டின் அமஸ்பரி மேயர் திருமதி சாருலதா மோனிகா தேவேந்திரன், ஆஸ்திரேலியா நாட்டின் ரிவர்டன் உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். ரவீந்திரன், டர்பன் முன்னாள் துணை மேயர் லோகி நாயுடு, Zoom Technology தலைவர் வேல்சாமி சங்கரலிங்கம், அயலக தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத் துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி, அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர்கள், வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

பொங்கல் திருநாளை முன்னிட்டு 1 லட்சத்து 12 ஆயிரத்து 675

# போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு சாதனை ஊக்கத்தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன.13-*

*“பொங்கல்” திருநாளை முன்னிட்டு 1 லட்சத்து 12 ஆயிரத்து 675 பேருக்கு 6 கோடியே 75 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் சாதனை ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*பொங்கல் திருநாளை முன்னிட்டு ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

*தமிழ்நாட்டில் சிறப்பான மற்றும் திறமையான போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் இயங்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் தான் பயணிகள் அடர்வு, பேருந்து பயன்பாடு, எரிபொருள் செயல்திறன் ஆகியவற்றில் உயர்ந்து விளங்குகின்றன.*

*குக்கிராமம் முதல் மாநகரங்கள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்கு தடையின்றி, போக்குவரத்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகிய அனைத்து நிறுவனங் களிலும் தற்போது சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.*

*பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு ஆகியவற்றில் பணிபுரியும், பணியாளர்களில், 2023ஆம் ஆண்டில் 91 நாட்கள் மற்றும் அதற்கு மேலும், ஆனால் 151 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 85 ரூபாய் வீதமும்; 151 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் ஆனால் 200 நாட்களுக்கும் குறைவாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு 195 ரூபாய் வீதமும், 200 நாட்கள் மற்றும் அதற்கு மேலும் பணிபுரிந்த ஊழியர்களுக்கு 625 ரூபாய் வீதமும் பொங்கல் “சாதனை ஊக்கத் தொகை” வழங்கப்படும்.*

*இந்த உத்தரவின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் சாதனை ஊக்கத்தொகை வழங்கப்படும்.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டு ள்ளது.*

---

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாடு!

# எழும்பூர் தொகுதியில் பொங்கல் விழா நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

*சென்னை, ஜன. 13 -*

*தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் தைப் பொங்கலை முன்னிட்டு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் கால்பந்தாட்டப் போட்டி, கேரம் போட்டி ஆகிய விளையாட்டுப் போட்டிகளும்; பண்பாட்டு நிகழ்வாக கோலப் போட்டி மற்றும் சமத்துவப் பொங்கல் விழாவும் நடைபெறவுள்ளன.*

*எழும்பூர் தொகுதி, 77 வது வார்டு, கே.பி.பார்க்கில் அமைந்துள்ள செயற்கை புல்தரை கால்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் 14.01.2024 அன்று காலை 9.00 மணி தொடங்கி எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த 16 அணிகள் பங்கேற்கும் கால்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.*

*எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், வழக்கறிஞர் தர்மதுரை ஆகியோர் இக் கால்பந்தாட்டப் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்துகின்றனர்.*

*எழும்பூர் தொகுதி, 108 வது வார்டு, சேத்துப்பட்டு, அவ்வைபுரத்தில் 14.01.2024 அன்று காலை 10.00 மணி தொடங்கி நூறுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்கும் கேரம் விளையாட்டுப் போட்டி நடைபெறவிருக்கிறது.*

*எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா.வெற்றிவேல் இக் கேரம் போட்டியை ஒருங்கிணைத்து நடத்துகிறார்.*

*எழும்பூர் தொகுதி, 77 வது வார்டு, சூளை, காட்டூர் நல்லமுத்து தெருவில் 14.01.2024 அன்று மதியம் 3.00 மணிக்கு கோலப் போட்டி நடைபெறவிருக்கிறது.*

*இக்கோலப் போட்டியைப் பாக முகவர் கவிதா ஒருங்கிணைத்து நடத்துகிறார்.*

*இவ்விளையாட்டுப் போட்டிகளிலும், கோலப் போட்டியிலும் வெற்றி பெறும் அணிகள், போட்டியாளர்களுக்குக் கோப்பைகள், பரிசுப் பொருட்கள் மற்றும் 40,000 ரூபாய் மதிப்பிலான விளையாட்டு வீரர்களுக்கான உடைகள், 50,000 ரூபாய் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூட உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி 14.01.2024 அன்று மாலை 7.00 மணியளவில், மாவட்டப் பிரதிநிதி கமலக்கண்ணன் தலைமையில் கே.பி. பார்க்கில் நடைபெறுகிறது. எழும்பூர் தொகுதி, 58 வது வட்டம், புரசை வாக்கம், தாக்கர் தெருவில் 15.01.2024 பொங்கல் திருநாளன்று காலை 11.00 மணியளவில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெறவிருக்கிறது. தலைமைக் கழகப் பேச்சாளரும் முன்னாள் வட்டத் துணைச் செயலாளருமான எம்.இ. தேவநிதி இச்சமத்துவப் பொங்கல் விழாவைத் தலைமையேற்று நடத்துகிறார்.*

*இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சருமான பி.கே. சேகர்பாபு மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர். மற்றும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல் வீரர்கள் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.*



திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவில் அமைச்சர் கே.என்.நேரு உறியடித்து பொங்கல் விழாவினை கொண்டாடினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சேர்மன் துரைராஜ் உட்பட அரசு அதிகாரிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.01.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, விளையாட்டுத் துறையில் தலைசிறந்து விளங்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் உயரிய விருதான “வாழ்நாள் சாதனையாளர் தயான் சந்த் விருது” பெற்ற கபடி வீராங்கனை திருமதி. கவிதா செல்வராஜு நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, உடனிருந்தனர்.


தூத்துக்குடி மாவட்ட தொழில் வளர்ச்சிக்கும்
பல்லாயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கும்
பெரும் பாய்ச்சல் முன்னேற்றம் ஏற்பட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்
ரூ.84,522 கோடி பெற்றுத் தந்த
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
தி.மு.க தலைவர் அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட மக்களின் சார்பாக
நெஞ்சார்ந்த நன்றி. நன்றி.. நன்றி...
ARASU ARTS
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்



கொரோனா
உடல் காத்தோம்... உயிர் காத்தோம்...
புத்தக (தமிழ்-ஆங்கிலம்)
வெளியீட்டு விழா
வரவேற்புரை
டாக்டர்.பழனியப்பன்
(திருமகள் நிலையம்)
நூல்கள் அறிமுக உரை
திரு.கோ.ஒளிவண்ணன்
(எமரால்டு பதிப்பகம்)
நூல்களை வெளியிடுபவர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
பெற்றுக் கொள்பவர்கள்
திரு.இந்து என்.ராம்
மூத்த பத்திரிகையாளர்
டாக்டர்.மோகன் காமேஸ்வரன்
(MERF நிறுவனர் )
தொகுத்து வழங்குபவர்
கவிஞர் இளைய கம்பன்
அனைவரும் வருக! வருக!! வருக!!!
நாள்: 13.01.2024
சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணி
இடம்: 47வது சென்னைப் புத்தகக் காட்சி,
YMCA நந்தனம்.
கொரோனா
CORONA CHRONICLES
அனைவரையும் அழைத்து மகிழும்...
மா.சுப்பிரமணியன்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
நூல் ஆசிரியர்
Santhosh Design
99401 80492



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 21 ஆம் தேதி நடைபெறுகின்றது. இதனையடுத்து மாநாடு திடலில் உள்ள அலுவலகத்தில் மாநாடு குறித்து கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மத்திய மாவட்டச் செயலாளர் இரா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ.,மேற்கு மாவட்ட செயலாளர் டி.எம்.செல்வகணபதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, எம்.பி.பார்த்திபன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், ஒன்றிய கழக செயலாளர்கள் மூர்த்தி சிவராமன் தங்க மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், வெங்கடேஸ்வரன், பொதுக் குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், சோமசுந்தரம், சந்திரமோகன், பேரூராட்சி தலைவர் அன்பழகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு அரசின் 'அயலகத் தமிழர் தினம் 2024'ல் பங்கேற்பதற்காக சென்னைக்கு வருகை தந்திருக்கும் சிங்கப்பூர் நாட்டின் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினார். அதுபோது இருவரும் தமிழ்நாட்டிற்கும் சிங்கப்பூருக்கும் இடையே உள்ள நீண்ட நெடிய பண்பாடு மற்றும் கலாச்சார உறவுகளையும் அவற்றை இன்னும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளையும் பற்றி பல்வேறு கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

# கடலோர வளங்களை மீட்டெடுக்க "நெய்தல் மீட்சி இயக்கம்"!

## தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளது!

சென்னை, ஜன. 13 -

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம், ஆகியவற்றைத் தொடர்ந்து, அரசின் நான்காவது திட்டமான தமிழ்நாடு கடலோர வளங்களை மீட்பதற்காக "நெய்தல் மீட்சி இயக்கத்தினை" தொடங்குவதற்கான ஆணைகளை தமிழ்நாடு அரசு புதன்கிழமை வெளியிட்டது. இதற்கான அறிவிப்பை 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில், 1076 கிலோமீட்டர் தூரத்தை மையமாகக் கொண்டு, வரும் ஐந்து ஆண்டுகளில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நெய்தல் மீட்சி இயக்கம் செயல்படுத்தப்படும். கடற்கரையோர பல்லுயிர் பெருக்கம், கடற்கரையோரப் பாதுகாப்பு, கடற்கரையோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு உள்ளிட்ட நான்கு முக்கிய கருப்பொருட்களை இத்திட்டம் கொண்டுள்ளது நீலப் பொருளாதாரத்தின் திறனைப் பயன்படுத்திக் கொள்ள முதன்முதலில் தமிழ்நாடு புளூ கார்பன் நிறுவனத்தை அமைப்பதை இந்தத் திட்டம் கருதுகிறது. தமிழ்நாடு "புளூ கார்பன் ஏஜென்சி" சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் உவர் சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும். மன்னார் வளைகுடாவில் உள்ள கரியாச் சல்லி தீவு, பவளப்பாறைகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பின்வரும் முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

1. பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா, கடம்பூர், செங்கல்பட்டு மாவட்டம்.
2. கடல் ஆமை பாதுகாப்பு மையம், நாகப்பட்டினம் மற்றும் சென்னை.
3. சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம், மனோரா, தஞ்சாவூர் மாவட்டம்.
4. கடற்கரையோர ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு (பள்ளிக்கரணை உட்பட).

இம்முயற்சியின் கீழ் கடற்கரையோர பல்லுயிர் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 11 கடற்கரைகளை நீலக் கொடி கடற்கரைகள் என சான்றளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை வசதிகளை அமைப்பதில் கடற்கரையோர சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஈடுபடுத்தவும், கைவிடப்பட்ட மற்றும் பயனற்ற மீன்பிடி உபகரணங்களை அகற்றவும், பிளாஸ்டிக் கழிவுகள் அதிகம் உள்ள இடங்களைக் கண்டறிதல் உள்ளிட்ட மாசுக் குறைப்புக்கான சுழற்சிப் பொருளாதாரத் தீர்வுகளுக்கான முன்முயற்சிகளில் ஈடுபடவும்திட்டமிடப்பட்டுள்ளது.

ஆறுகளின் வழித்தடங்களில் அதிக மாசு உள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து சேமித்து வைப்பதற்கான பொருள் சேகரிப்பு வசதிகள் மற்றும் அப்பொருட்களை மறுசுழற்சி செய்யும் வசதிகள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலம் கடல் மாசுபாடு தடுக்கப்படும். மேலும் சேகரிப்பு வசதிகளை இணைக்க மின்னணு கழிவுப் பரிமாற்ற தளத்தை உருவாக்குதல், மறுசுழற்சி மற்றும் பொருட்களை மீண்டும் பயன்படுத்துதல், பயனுள்ள பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை. மீள்குடி யேற்றமான வீடுகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்கட்டமைப்பு, காலநிலைக்கேற்ற கடலோர விவ சாயம், புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் காலநிலை மாதிரி கடலோர கிராமங்களை உருவாக்குதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் சமூகத்தினை ஈடுபடுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 'கேலோ இந்தியா' இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்!

## முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.01.2024), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் – 2023 போட்டியை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 மாவட்டங்களில் வரும் ஜனவரி 19 முதல் 31–ந் தேதி வரை நடத்துவது தொடர்பான நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜன. 13 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடத்துவதற்காக முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் நிர்வாகக் குழுவினரிடம் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முன்னிலை வகித்தார். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சுமார் 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர் வீராங்கனைகளும் 1600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்க உள்ளனர். மேலும், 1000க்கும் மேற்பட்ட நடுவர்கள் மற்றும் 1200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இந்த ஆண்டு 27 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டுகளில் (Demo Sports) இடம்பெறுகிறது.

போட்டி நடைபெறும் இடங்கள் & அட்டவணை, உள்கட்டமைப்பு நிலை, வரவேற்பு/நெறிமுறை, போக்குவரத்து, துவக்க & நிறைவு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நகரங்கள், குடிநீர் வழங்கல் & சுகாதார வசதி, போட்டி நடைபெறும் நாளுக்கான நிகழ்வு மேலாண்மை, ஊடகம் & பத்திரிகை, விளம்பரப்படுத்துதல், போட்டி நடத்தும் மாநிலம்/மாவட்டத்தை முடுக்கிவிடுதல், பாதுகாப்பு ஏற்பாடுகள், பரிசு விநியோகம், மருத்துவச் சேவைகள், தங்குமிடம், சுகாதாரம் & உணவு வழங்குதல், விளையாட்டு மைதானங்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பு, மேடை ஏற்பாடுகள், மின்சார விநியோக வசதி, முக்கியச் சாலைகள் & சாலைத் தளவாடங்கள், இந்திய அரசு/மாநில அரசு ஒருங்கிணைப்பு, மாநில ஒருங்கிணைப்பு & கட்டுப்பாட்டு அறை, அங்கீகார அட்டைகள், தொழில்நுட்பம் & தகவல் தொழில்நுட்பச் சேவைகள், பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், பண்பாட்டுப் பொழுதுப் போக்கு நிகழ்ச்சிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, இந்திய விளையாட்டு ஆணையத்தின் துணை இயக்குநர் ஏக்தா விஷ்னோய், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு

# திருவண்ணாமலை நகரில் கோலப்போட்டிகள்!

## அருணை தமிழ்ச் சங்கம் நடத்துகிறது!

திருவண்ணாமலை, ஜன. 13-

தமிழ்ப் புத்தாண்டு தமிழர் திருநாளை முன்னிட்டு, திருவண்ணாமலை நகரில், அருணை தமிழ்ச் சங்கம் கோலப்போட்டிகளை நடத்துகிறது. வெற்றி பெறுபவர்களுக்கு அருணைத் தமிழ்ச் சங்க பொங்கல் விழாவில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு பரிசுகள் வழங்குகிறார்.

தமிழர் திருநாளாம் பொங்களை முன்னிட்டு, திருவண்ணாமலை நகரில் 39 வார்டுகளிலும் அருணை தமிழ்ச் சங்கம் சார்பில், கோலப்போட்டிகள் நடைபெறவுள்ளது. நாளை (14.01.2024 - ஞாயிற்றுக்கிழமை) இரவு 10.00மணி முதல் 12.00மணி வரை, அதாவது போகிப் பொங்கல் இரவில் போடப்படும் கோலங்களை நடுவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

திருவண்ணாமலை நகரின் 39 வார்டுகளிலும் போட்டிகள் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு வார்டிற்கும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு மற்றும் ஆறுதல் பரிசுகள் 5 என 8 பரிசுகள் வழங்கப்படும். ஒவ்வொரு வார்டிற்கும் தனித்தனியே நடுவர் குழுவினர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அருணை தமிழ்ச் சங்கம் சார்பில் நடத்துகிற இந்த கோலப் போட்டியில் அன்பு சகோதரிகள் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

18.01.2024 வியாழக் கிழமை அன்று திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் நடைபெறும் தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள் விழாவில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு பரிசுகள் வழங்குகிறார்.

ஒவ்வொரு வார்டிற்கும் முதல் பரிசாக ரூ. 7000 மதிப்புள்ள சிம்போனி ஏர் கூலரும், இரண்டாவது பரிசாக ரூ.6000 மதிப்புள்ள விகார்டு ரிமோட் பேனும், மூன்றாம் பரிசாக ரூ.3000 மதிப்புள்ள கேஸ் அடுப்பும் மற்றும் தோசை தவாவும், ஆறுதல் பரிசாக ரூ.1300 மதிப்புள்ள சில்வர் ஹாட்பாக்சும் வழங்கப்படவுள்ளது.

கோலப்போட்டி ஏற்பாடுகளை அருணை தமிழ்ச் சங்கம் சார்பில் செயலாளர் வெ.ஆல்பர்ட், பொருளாளர் எம்.இ.ஜமாலுதீன், இணைச் செயலாளர் எ.வ. வே.குமரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

அவனியாபுரம் - பாலமேடு - அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் சிறந்த காளை - சிறந்த மாடு பிடி வீரருக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சார்பாக கார்கள் பரிசு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

மதுரை, ஜன. 13 -

மதுரை மாவட்டம், மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று முன்தினம் (11.01.2024) மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உலகப் புகழ்பெற்ற அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஆகிய ஜல்லிக்கட்டுப் போட்டிகளின் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.



இதில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழர் திருநாள் பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகளான அவனியாபுரம் ஜல்லிக்கட்டு, பாலமேடு ஜல்லிக்கட்டு மற்றும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு ஆகிய ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலகப் புகழ்பெற்றவை. இவ்வாண்டு தமிழ்நாடு அரசு சார்பாக ஜனவரி 15.அன்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு, 16 அன்று பாலமேடு ஜல்லிக்கட்டு, 17அன்று அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு என முறையே நடைபெறவுள்ளது. இந்த ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்கள் விண்ணப்பம் செய்வதற்கான இணையதளப் பதிவு 10.01.2024 பகல் 12.00 மணிக்கு தொடங்கி, 11.01.2024 பகல் 12.00 மணிக்கு நிறைவு பெற்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மொத்தம் 12,176 காளைகள், 4,514 மாடுபிடி வீரர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளனர்.

குறிப்பாக, அவனியாபுரத்தில் பங்கேற்பதற்கு 2,400 காளைகள், 1,318 மாடுபிடி வீரர்கள், பாலமேட்டில் பங்கேற்பதற்கு 3,677 காளைகள், 1,412 மாடுபிடி வீரர்கள், அலங்காநல்லூரில் பங்கேற்பதற்கு 6,099 காளைகள், 1784 மாடுபிடி வீரர்கள் என விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் இவ் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இரட்டைப் பதிவு, சரியான ஆவணங்கள் இல்லாமை போன்ற விண்ணப்பங்கள் நிரா கரிக்கப்படும்.

அந்த வகையில், ஜல்லிக்கட்டுப் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முன்னேற்பாடு பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பாக, மேற்குறிப்பிட்டுள்ள ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் தேர்வு செய்யப்படும் சிறந்த காளைக்கு 1 கார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் சார்பாக, சிறந்த மாடு பிடி வீரருக்கு 1 கார் பரிசாக வழங்கப்படும்.

அதேபோல, அலங்காநல்லூர் அருகே கீழக்கரைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு அரங்கம் இம்மாத இறுதிக்குள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்படவுள்ளது. தொடக்க விழா நடைபெறும் நாளன்று தொடங்கி தொடர்ந்து 4 நாட்கள் என மொத்தம் 5 நாட்களுக்கு இந்த பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு அரங்கில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு!

நெல்லை, ஜன. 13 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங் களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் நடைபெறுகிறது என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி,மகளிர் அணி, தொண்டரணி, தொழிலாளரணி, வழக்கறிஞர் அணி,பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளரணி, சுற்றுச்சூழல் அணி,அயலக அணி உள்ளிட்ட தலைமைக் கழகம் அறிவித்த மேற்கண்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருமங்கலம் தொகுதியில் -

# மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை, ஜன. 13 -

திருமங்கலம் தொகுதி, தே.கல்லுப்பட்டி ஒன்றியம் முத்தப்பன்பட்டியில் அமைந்துள்ள சேடபட்டியார் அரங்கத்தில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) மாவட்ட அவைத் தலைவர் த.நாகராஜன் தலைமையில் மதுரை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் என அனைவரும் தவறாது மதியம்12 அளவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



**பொருள்:** 1. கழக இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டில் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புக்கள் பெருந்திரளாக கலந்து கொள்வது சம்பந்தமாக.

3. தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் சம்பந்தமாக.

2. கழகத்தின் ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் அறிவித்துள்ளார்.

மதுரை மாநகர் மாவட்ட

# தகவல் தொழில்நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பு!

மதுரை, ஜன. 13 -

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 09.30 மணியளவில் பசுமலை கோபால்சாமி மண்டபத்தில் மாவட்ட அளவில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள்தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

## தொழில் நுட்பத்தின் துணைகொண்டு - அனைவரையும் உள்ளடக்கிய

# வளமான வருங்காலம் படைக்க ஒன்றிணைவோம்!

## ‘டீல்ஸ்’ திட்ட தொடக்க விழாவில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!



சென்னை, ஜன.13 –

**“தொழில் நுட்பத்தின் துணை கொண்டு ஒளிமயமான, அனைவரையும் உள்ளடக்கிய வளமான வருங்காலத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்” என்று டீல்ஸ் திட்ட தொடக்க விழாவில் உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

சென்னையில் 2024 ஜனவரி 11 அன்று பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ‘டீல்ஸ்’ திட்ட தொடக்க விழாவில், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“ ‘டீல்ஸ்’ திட்டத்தின் தொடக்க விழாவான இன்று, உங்கள் முன்னால் நான் மிகுந்த பெருமையுடனும் மகழ்ச்சியுடனும் நின்றுகொண்டிருக்கிறேன்.

வருங்காலத்துக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களை நமது உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் இந்தப் பயணத்தை மேற்கொண்டதற்காக பள்ளிக் கல்வித் துறைக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை மற்றும் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் ‘டெக்னாலஜி எஜுகேஷன் அண்ட் லேர்னிங் சப்போர்ட்’ (டீல்ஸ்) திட்டம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்தப் பணி, கல்வித் துறையில் டிஜிட்டல் புரட்சியையும், புதுமையான முறையில் கற்றுக்கொள்ளலையும் உறுதி செய்யும்.

தமிழ்நாடு அரசு மற்றும் மைக்ரோசாஃப்ட்டின் இந்த முயற்சி, நமது மாநிலத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் திறன்களை உயர்த்துவதில் மிக முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

**உயர்ந்த இடத்தில் மாநில கல்வித் துறை!**

இந்தச் சமயத்தில், நமது ‘திராவிட மாடல் அரசு’ நமது மாநிலத்தில் கல்வித் துறையை உயர்ந்த இடத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

நாட்டிலேயே முதன்முறையாக, நமது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிமுகப்படுத்தினார். அதன் காரணமாக, நமது அரசுப் பள்ளிகளில் கணினிக் கல்வி கற்க வழி ஏற்பட்டது.

இன்று, நமது முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளால், பள்ளிகளில் கணினி சார்ந்த கல்வித் திட்டம் கற்பிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக, நமது பள்ளிகளில் கரும்பலகைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் வகுப்பறைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அது மட்டுமல்லாது, நமது முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வியை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல பல்வேறு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மிக முக்கியமாக, அரசு தொடக்கப் பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம், 17 ஆயிரம் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான 34 இலட்சம் மாணவர்கள் தினமும் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகிறார்கள்.

அதேபோல, ‘புதுமைப்பெண் திட்டம்’ மூலம், அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகள், உயர்கல்வி கற்க கல்லூரிகளுக்குச் செல்லும்போது அவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

இங்கு நிறைய அரசுப் பள்ளி மாணவ – மாணவியர்களும் வந்திருக்கிறீர்கள். நம்முடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கெல்லாம் நீங்களும் – உங்கள் வளர்ச்சியுமே சான்றாக உள்ளன.

**கற்றல் இடைவெளி பெருமளவில் குறைப்பு!**

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த இல்லம் தேடி கல்வி திட்டம், பேரிடர் நேரத்தில் மிகப்பெரிய அளவில் மாணவர்களுக்கு உதவியது. ‘எண்ணும் எழுத்தும்’ திட்டம் கற்றல் இடைவெளியை பெரிய அளவில் குறைத்துள்ளது.

அனைவருக்கும் ஐ.ஐ.டி. (IIT) திட்டம், அரசுப் பள்ளி மாணவர்களை ஐஐடி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர வழிவகை செய்கிறது.

அரசுப் பள்ளிகளில் செயல்பட்டு வரும், பள்ளி மேலாண்மை குழுக்களை மறு கட்டமைப்பு செய்வதற்காக “ நம் பள்ளி நம் பெருமை” திட்டத்தை நம் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள லேடி வில்லிங்டன் பள்ளியில் முதலமைச்சர் அவர்கள் 2022ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள்.

நேற்று முன் தினம் கூட, முன்னாள் அரசுப் பள்ளி மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்கள் படித்த பள்ளிகளை மேம்படுத்திடும் விதமாக விழுதுகள் எனும் முன்னெடுப்பை தொடங்கி வைத்தோம்.

நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த ‘நான் முதல்வன்’ திட்டம், உயர் கல்விக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. அதோடு, திறன் சார்ந்த படிப்புகளையும் ‘நான் முதல்வன்’ திட்டம் வழங்கி வருகிறது. இதனால் வருங்காலத்தில் தொழில்துறையினர் எதிர்பார்க்கும் திறன்களை நமது மாணவர்கள் கொண்டிருக்க முடியும்.

ஆசிரியர்கள்தான் நமது வருங்காலத்தின் சிற்பிகள் என்பதை நம்புகிறோம். எனவே அவர்களுக்கு ‘ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ்’ (செயற்கை நுண்ணறிவு) போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கிறோம். அதன் மூலம், கரும்பலகைகளில் மட்டுமே பாடம் நடத்திக் கொண்டிருப்பதில் இருந்து விடுபட்டு, நவீனமான, புதிய முறைகளில் அவர்களால் மாணவகளுக்குப் பாடங்களைக் கற்பிக்க இயலும்.

**மாணவர்கள் திறனுக்கு ஏற்ப கற்பித்தல் முறை!**

வழக்கமான கற்பிக்கும் முறைகளில் இருந்து விலகி, தங்களின் எல்லைகளை விரிவாக்கிக் கொள்ள ஆசிரியர்களுக்கு ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ் உதவுகிறது. இதன் வாயிலாக, ஒவ்வொரு மாணவரின் திறனையும் பலத்தையும் அறிந்து, அவர்களுக்கு ஏற்றாற் போன்று கற்பித்தல் முறைகளை வடிவமைத்துக்கொள்ள ஆசிரியர்களால் முடியும்.

இது ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை வளப்படுத்துவதோடு, கற்பித்தல் எனும் பயணத்தை, தொடர் பரிசோதனை முயற்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் உட்படுத்துகிறது.

‘டீல்ஸ்’ போன்ற முன்னெடுப்புகள் மூலம், நாம் டிஜிட்டல் இடைவெளிகளைக் குறைத்து வருகிறோம். உலகம் டிஜிட்டல் மையமாகி வரும் சூழலில், இது போன்ற முயற்சிகள் பலமான அடித்தளத்தை நமது மாணவர்களுக்கு உருவாக்கித் தருகின்றன.

அரசும் தொழில்துறையும் இணைந்து செயல்படும்போது எப்படிப்பட்ட அதிசயங்கள் உருவாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தத் திட்டம் திகழ்கிறது. நமது கல்வி, புத்தாக்க முயற்சிகள் மற்றும் இளைஞர்களின் வருங்காலம் ஆகியவற்றுக்காக அரசும், மைக்ரோசாஃப்ட் போன்ற நிறுவனங்களும் சரிசமமான அர்ப்பணிப்புணர்வுடன் செயலாற்றுகின்றன.

அரசும் தொழில் துறையும் இணைந்து, தடைகளைத் தகர்த்து, எண்ணற்றவர்களின் வாழ்க்கையை மாற்றுகிற வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன.

இந்த முயற்சியில் முன்னணியில் நிற்கிற ஆசிரியர்களே, உங்களுடைய ஆர்வத்துக்கும் ஈடுபாட்டுக்கும் நான் தலைவணங்குகிறேன்.

அடுத்த தலைமுறை கண்டுபிடிப்பாளர்களுக்கும், பிரச்சினைக ளுக்குத் தீர்வு சொல்கிறவர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்குவதில் உள்ள உங்களுடைய பங்களிப்பு, விலை மதிப்பற்றது.

**கற்பதற்கான ஈடுபாடு அதிகரிப்பு!**

கற்பித்தலில் உள்ள புதிய நுட்பங்களையும் முறைகளையும் ஏற்றுக்கொள்கிற உங்களின் ஆர்வத்தினால் உங்களது கற்பித்தல் முறை வளமாவதோடு, உங்களது மாணவர்கள் மத்தியில் கற்றுக் கொள்வதற்கான ஈடுபாட்டையும் அதிகரிக்கிறது.

மாணவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, நீங்கள் எல்லோரும் ஒரு புதிய பயணத்தை மேற்கொள்வதற்கான புள்ளியில் நின்றுகொண்டி ருக்கிறீர்கள்.

இந்தத் திட்டம் தொடங்கப்படும் இந்த நாளில், உண்மையான வளர்ச்சி என்பது அறிவைத் தேடிச் சேகரிப்பதிலும், அதனை மனிதநேயத்துடன் செயல்படுத்துவதிலும்தான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

கல்வித்துறையில் இளைய மனங்களை ஒரு மாபெரும் புரட்சிக்குத் தயார்படுத்தி வருகிறது தமிழ்நாடு. கல்வித்துறையில் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், நாம் ஆசிரியர்களை விட்டு விலகுகிறோம் என்று அர்த்தம் அல்ல. மாறாக, அவர்களை ஆசிரியர்கள் என்ற இடத்திலிருந்து வழிகாட்டிகள் எனும் நிலைக்கு உயர்த்துகிறோம்.

கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், பிரச்சினைகளுக்கு நவீனமான வழிகளில் தீர்வு காண்பதற்கும் தொழில்நுட்பம் மிகுந்த உதவியாக உள்ளது. காலத்துக்கேற்றாற் போல் மாணவர்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கும், புத்தாக்க முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும் தேவையான திறன்களை தொழில்நுட்பம் வழங்குகிறது.

அடுத்த தலைமுறை தலைவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் மாற்றத்தின் தூதுவர்கள் ஆகியோரை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை உங்களது நண்பராக நீங்கள் கருத வேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்குள் என்ன திறன்கள் ஒளிந்திருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள, இந்தத் தொழில்நுட்பத்தை ஒரு கருவியாக நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திறமைகளை வெளிக்கொணர்வீர்!**

கட்டற்ற கல்வி, ஒளிபடைத்த மனங்கள், காணுமிடமெல்லாம் புதுமை என்ற இலக்குகளை நோக்கி நாம் அனைவரும் பயணிப்போம்.

நாம் கற்கும் ஒவ்வொரு பாடத்தையும், நாம் பெறும் ஒவ்வொரு அனுபவத்தையும் ஆர்வத்துடன், உற்சாகத்துடன் எதிர்கொள்ள இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

அரசும் தொழில்துறையும் கைகோர்க்கும் இந்தக் கூட்டணியை உருவாக்கிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்நுட்பத்தின் துணை கொண்டு, ஒளிமயமான, அனைவரையும் உள்ளடக்கிய வளமான வருங்காலத்தைப் படைக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

பள்ளிக் கல்வித் துறையில் ஒவ்வொரு நாளும் புதிய புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி முக்கியம் என்று தந்தையின் இடத்திலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்போதும் சொல்லி வருகிறார்கள். அதன்படி நீங்கள் அனைவரும் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

கல்வித்துறையில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் அதே நேரத்தில், ஒரு விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற முறையில், மாணவர்களை பி.டி.பீரியடுகளின் போது விளையாட அனுமதிக்க வேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பி.டி.பீரியடுகளைக் கடன் வாங்கி பாடங்களை நடத்தாதீர்கள் என்பதை நான் இங்கே ஒரு கோரிக்கையாகவே வைக்கிறேன்.

‘டீல்ஸ்’ முன்னெடுப்பு வெற்றி பெறவும் – மாணவர்களின் மேன்மைக்கு துணை நிற்கவும் என்னுடைய வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜே.குமரகுருபரன். ‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ உறுப்பினர் செயலர் ஆர்.சுதன் நிர்மான் டீம், இணை முதன்மைச் செயல் அலுவலர் உமா கேசனி, ஜீக் மைண்ட்ஸ் முதன்மைச் செயல் அலுவலர் கணேஷ் கோபாலகிருஷ்ணன், டேட்டா அண்ட் ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ், மைக்ரோசாஃப்ட், இயக்குநர் சிசில் சுந்தரம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

---

# நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை.!



*நீலகிரி, ஜன. 13-*

நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் ஆலோசனைப்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் முன்னெடுப்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 10 மணியளவில் மாவட்ட அளவிலான “சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு” மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்த பயிற்சி வகுப்பில் நீலகிரி மாவட்ட திமுக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, ஆதிதிராவிடர் நலக்குழு, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, நெசவாளர் அணி, மீனவர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்பிலுள்ள அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுகிறேன்.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தங்களது அணி நிர்வாகிகள் அனைவரும் சரியாக 9.30 மணியளவில் தவறாது கலந்துக்கொள்வதை உறுதி செய்து உதவிட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## 1000 பேரை இலவசமாக

# அறுபடை வீடுகளைத் தரிசிக்கும் திட்டத்திற்குப் பாராட்டு!

## கோவில் பூசாரிகள் நலச் சங்கத் தலைவர் பி.வாசு அறிக்கை!

*சேலம், ஜன. 13 -*

ஆண்டு தோறும் 1000 பேரை இலவசமாக அறுபடை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் திராவிட மாடல் அரசுக்கு கோவில் பூசாரிகள் நலச் சங்கத் தலைவர் பி.வாசு பாராட்டு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்க் கடவுளான எல்லாம் வல்ல முருகப்பெருமானின் அறுபடை வீடுகளைத் தரிசிக்க ஆண்டுக்கு 1000 பேரை கட்டணம் இன்றி அழைத்துச் செல்ல மேற்கொண்டுள்ள செயல் திட்டத்தைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை மேற்கொண்டு வரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவருக்கு மனப்பூர்வமாக நன்றி.

தமிழ்நாட்டில் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருத்தணி, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை ஆகிய இடங்களில் எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகப்பெருமான் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் மட்டுமின்றி உலகத் தமிழர்கள் அனைவரது நெஞ்சில் நீங்கா இடம் பெற்றவர். இந்த அறுபடை வீடுகளையும் ஒரு சேர தரிசிக்க 200 பக்தர்கள் வீதம் ஆண்டுக்கு 1000 பேரை கட்டணம் இன்றி இந்து சமய அறநிலைத்துறை மூலம் அழைத்துச் சென்று வர செய்துள்ள ஏற்பாடு வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டில் ஆன்மீகம் செழிக்க திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான அரசு எண்ணற்ற செயல் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 60 வயதிற்கு மேற்பட்ட முதிய பூசாரிகள் ஒய்வூதியத்தை நான்காயிரமாக உயர்த்தி அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்து சமய அறநிலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும்திருக்கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளுக்கு மாத ஊக்கத் தொகை ஆயிரம் ரூபாய் வழங்க முதல் முறையாக வழி செய்தது. அத்துடன் அனைத்துத்திருக்கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை சமூக நீதியை நிலை நாட்டு வகையில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சராக வகை வழிவகை செய்தது. அர்ச்சகர் பயிற்சி முகாம் மற்றும் பெரிய திருக்கோவில்களில் முழு நேர அன்னதானம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இந்திய நாட்டிற்கு எடுத்துக்காட்டாக திராவிட மாடல் ஆன்மீக அரசு செயல்பட்டு வருகிறது.

எனவே இந்த ஆன்மீக மாடல் அரசுக்கு கோவில் பூசாரிகள் நலச் சங்கம் என்றென்றும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு தனது அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---





கோவை மாவட்ட திராவிடர் கழகம் சார்பில், கோவை புலியகுளம் ரெட் பீல்டு சாலையில், “வைக்கம் நூற்றாண்டு விழா கலைஞர் நூற்றாண்டு விழா ஜனநாயகம், சமூகநீதி பாதுகாப்பு” என்ற தலைப்பில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா, சிறப்புரையாற்றினார். உடன் கோவை மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், கோவை இராமகிருஷ்ணன், மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், பகுதிச் செயலாளர் பசுபதி சந்திரசேகர் உள்ளிட்டோர் உள்ளார்கள்.



திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட தாமலேரிமுத்தூர் கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், மாவட்டக் கழகச் செயலாளர் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இ.வளர்மதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.சத்யா சதீஷ்குமார், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (11.01.2024) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் அணையின் பிக்கப் அணைக்கட்டில் இருந்து இடது மற்றும் வலது புற கால்வாயில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), செயற்பொறியாளர், நீர்வள துறை., (கூ/பொ) மத்திய தென்பெண்ணையாறு ஜி.கிருஷ்ணகுமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.01.2024) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட செட்டிநாடு கால்நடைப்பண்ணையின் செயல்பாடுகள் குறித்து, ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இரா.கார்த்திகேயன் மற்றும் செட்டிநாடு கால்நடைப்பண்ணை துணை இயக்குநர் மரு.வே.சு.ராகவன், கால்நடை உதவி மருத்துவர்கள், விவசாய மேலாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### 50 ஆயிரம் ஏக்கர் நிலம் பயனடையும்

# சாத்தனூர் அணை 100 நாட்களுக்குத் திறப்பு!

## அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்று திறந்து வைத்தார்!

*திருவண்ணாமலை, ஜன. 13-*

திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையின் பிக்கப் அணைக்கட்டில் இடது மற்றும் வலது புறகால்வாய்களில் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் உயர் எ.வ.வேலு தண்ணீர் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன், (கலசப்பாக்கம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டத்தில் அமைந்துள்ள சாத்தனூர் அணையின் முழு நீர் மட்டம் 119.00 அடி, சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் முழு கொள்ளளவு 7321 மி.க.அடியாகும். நேற்று முன்தினம் காலை 8.00 மணி அளவில் சாத்தனூர் அணையின் நீர் மட்டம் 118.00 அடி, கொள்ளளவு 7097 மி.க.அடி முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சாத்தனூர் அணையின் பிக்கப் அணைக்கட்டிலிருந்து சாத்தனூர் இடதுபுறக் கால்வாயில் வினாடிக்கு 330 கன அடி நீரும் வலதுபுறக் கால்வாயில் வினாடிக்கு 200 கன அடி நீரும் நேற்று முன்தினம் ஜனவரி 11, 2024 முதல் ஏப்ரல் 20, 2024 வரை 100 நாட்களுக்கு நீர் திறந்து விடப்படுகிறது.

மேலும், 2024 ஆம் ஆண்டில் அணையின் நீர் இருப்பு மற்றும் உத்தேச நீர் பகிர்மான விவரம் சாத்தனூர் அணையில் தற்போது 7097 மி.க.அடி தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. அடிப்படைத்தேவை, குடிநீர் திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நீர் அளவு, மண் தூர்வினால் ஏற்பட்டுள்ள கொள்ளளவு இழப்பு மற்றும் நீர் ஆவியாதல் மூலம் ஏற்படும் இழப்பும் சேர்ந்து 1291.00 மி.க.அடி தண்ணீர் தேவை. ஆகவே அணையின் மீதம் உள்ள பாசனம் நீர் இருப்பு 5795.00 மி.க.அடியாகும்.

சாத்தனூர் அணை பாசன நிலங்கள் 45 ஆயிரம் ஏக்கருக்கு இடது புறக் கால்வாயில் விநாடிக்கு 330 கன அடியும் மற்றும் வலது புறக் கால்வாய்களில் விநாடிக்கு 200 கன அடியும் முறையே என மொத்தம் 530 கன அடி வீதம் ஜனவரி 11, 2024 முதல் ஏப்ரல் 20, 2024 வரையிலான 100 நாட்களுக்கு தொடர்ச்சியாக தண்ணீரை வழங்குவதற்கும், திருக்கோவிலூர் அணைக்கட்டு பழைய ஆயக்கட்டு 5000 ஏக்கருக்கு இரண்டாம் போக சாகுபடிக்கு 1200 மில்லியன் கன அடி நீரினை நீர் பங்கீடு விதியின்படி ஏப்ரல் 30க்குள் விவசாயிகளின் கோரிக்கையின்படி மூன்று தவணைகளில் சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும்.

மேலும், திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு விவசாயிகளின் கோரிக்கையின்படி மூன்று தவணைகளாக தண்ணீர் திறந்துவிடப்படும். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 46 கிராமங்கள், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 58 கிராமங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 15 கிராமங்களில் உள்ள மொத்தம் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும்.

பாசன நீரை சிக்கனமாகவும், துறை பணியாளர்களின் அறிவுரைப்படியும் சிறந்த முறையில் பயன்படுத்தி நல்ல விளைச்சல் பெற்றிட எல்லா வகையிலும் ஒத்துழைக்குமாறு பாசன ஆயக்கட்டுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிவிக்கப்பட்ட தேதிக்கு மேலும் எக்காரணத்தைக் கொண்டும் பாசனத்திற்கு தண்ணீர் வழங்கும் தேதியை நீட்டிக்கப்பட மாட்டாது.

தற்போது, திறந்துவிடப்படும் நீரானது ஜனவரி 11, 2024 முதல் 25 நாட்களுக்கு கடைமடை பகுதிகளுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து நீர் வழங்கப்படும். எனவே, விவசாயிகள் இந்த நீரை சிக்கனமாக பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நீர் பகிர்மான முறைப்படுத்தும் பொறிஞர் பு.கிருஷ்ணகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.மு.பிரியதர்ஷனி, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி. மந்தாகினி, உதவி செயற்பொறியாளர் ஆர். சிவக்குமார், சாத்தனூர் அணை உதவிப்பொறியாளர் பி.ராஜேஷ், சாத்தனூர் அணை (கூ/பொ) மற்றும் தென்முடியனூர் உதவிப் பொறியாளர் கே. மதுசூதனன், தண்டராம்பட்டு ஒன்றியக் குழு தலைவர் திருமதி. பரிமளா தலையாசன், வானாபுரம் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் பல்கலைக் கழகத்தின் - முக்கியப் பதவிகளில்

# பிற்போக்காளர்களையும் ஜனநாயக விரோதிகளையும் ஆளுநர் ரவி அமர்த்தியுள்ளார்!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

*சென்னை, ஜன. 13 -*

தந்தை பெரியார் பெயரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தின் முக்கியமான பதவிகளில் ஜனநாயக விரோதிகளையும், பிற்போக்காளர்களையும் ஆளுநர் ஆர்.என்.ரவி அமர்த்தியுள்ளார். இது அரசியல் சட்ட விரோதம் என ‘தீக்கதிர்’ நாளேடு 12.01.2024 அன்று தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.

அத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெகநாதன் முறைகேடு மற்றும் வன்கொடுமை வழக்கில் காவல்துறையால் கைது செய்யப்பட்டவர்.

தனியார் நிறுவனமான பூட்டர் பவுண்டேஷன் மற்றும் பூட்டர் பார்க் நிறுவனங்கள் வாயிலாக பயிற்சிக் கல்வி, பாடத்திட்டம் வழங்குவது தொடர்பாகப் பல தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் முறைகேட்டில் ஈடுபடுவதாக அவர் மீது புகார்கள் நிலுவையில் உள்ளன. இதுமட்டுமல்ல, பா.ஜ.க. ஆதரவு தனக்கு இருப்பதால் பேராசிரியர்களை ஒருமையில் திட்டுவது, பட்டியலின பேராசிரியர்களை சாதி ரீதியாக அவமானப்படுத்துவது என அராஜகமாக நடந்து கொள்வது அவரது வழக்கம்.

பொதுவாக பல்கலைக் கழக துணைவேந்தர் நியமனங்களைப் பொறுத்தவரை மாநில அரசு ஒருவரைத் தேர்வுசெய்து அவரது பெயரை ஆளுநருக்கு பரிந்துரைக்கும். அந்த பெயருக்கு ஒப்புதல் வழங்குவது தான் ஆளுநரின் வேலை, ஆனால் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கூட்டாட்சித் தத்துவத்தை சற்றும் மதிக்காமல், மாநில அரசு பரிந்துரைக்கும் நபரது நியமனத்திற்கு ஒப்புதல் வழங்க மறுப்பது அல்லது தனக்கு வேண்டியவர்களை துணைவேந்தராக நியமித்து மாநில அரசுக்கு குடைச்சல் கொடுப்பது ஆளுநர்களின் வேலையாக மாற்றப் பட்டுள்ளது.



தீக்கதிர்

2024 ஜனவரி 12 வெள்ளிக்கிழமை

குற்றவாளிக்கு அடைக்கலம் தருகிறாரா ஆளுநர்?

சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெகநாதன் முறைகேடு மற்றும் வன்கொடுமை வழக்கில் காவல்துறையால் கைது செய்யப்பட்டவர். தனியார் நிறுவனமான பூட்டர் பவுண்டேஷன் மற்றும் பூட்டர் பார்க் நிறுவனங்கள் வாயிலாக பயிற்சிக் கல்வி, பாடத்திட்டம் வழங்குவது தொடர்பாகப் பல தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் முறைகேட்டில் ஈடுபடுவதாக அவர் மீது புகார்கள் நிலுவையில் உள்ளன. இதுமட்டுமல்ல, பாஜக ஆதரவு தனக்கு இருப்பதால் பேராசிரியர்களை ஒருமையில் திட்டுவது, பட்டியலின பேராசிரியர்களை சாதி ரீதியாக அவமானப்படுத்துவது என அராஜக

தந்தை பெரியார் பெயரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தின் முக்கியமான பதவிகளில் ஜனநாயக விரோதிகளையும் பிற்போக்காளர்களையும் ஆளுநர் ரவி அமர்த்தியுள்ளார். அப்படிப்பட்ட ஒருவர் தான் ஜெகநாதன். அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் உள்ளபோதிலும் அவரை ரிமாண்ட் செய்ய மறுத்து அவருக்கு சேலம் குற்றவியல் நீதிமன்ற நடுவர் இடைக் கால ஜாமீன் அளித்தது சட்டப்படி தவறு என்று மாநில அரசின் சார்பில் வாதிடப்பட்டு வருகிறது.

வன்கொடுமைத் தடுப்பு சட்டத்தின்கீழ் துணை வேந்தர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் சிறப்பு நீதிமன்றத்துக்கான அதிகாரத்தை குற்றவியல் நடுவர் எப்படி எடுத்துக்கொண்டார் என்ற விவகாரம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளான நபரை ஆளுநர் சந்திப்பதும், அவருடன் பல்கலைக் கழக செயல்பாடுகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடத்துவதும் தமிழகம் இதுவரை கண்டிராத விசித்திரமாக உள்ளது.

ஆளுநர் ரவியின் இத்தகைய செயல், குற்றம் செய்வோருக்கு அடைக்கலம் தருவதே ஆகும். பெரியார் பல்கலைக் கழக துணைவேந்தருக்கு ‘எதையும் செய்யலாம் என்ற சமிக்ஞையை ஆளுநர் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆளுநர் போன்ற உயர்பதவியில் இருப்பவர்களின் இத்தகைய மோசமான செயல்பாடு இதோடு நிற்கப்போவதில்லை, நீதிமன்றத் திற்கும் தவறான வழிகாட்டுதல்களை தந்துவிடும். இது அரசியல் சட்ட விரோதம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# தமிழ்ப் புத்தாண்டு - தமிழர் திருநாள் சமத்துவப் பொங்கல் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

*நெல்லை, ஜன.13-*

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (13ஆம் தேதி சனிக்கிழமை) காலை 11 மணியளவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டக் கழகத்தில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

இவ்விழாவில் மத நல்லிணக்கத்தை போற்றி காக்கும் வகையில் சமத்துவத்தையும்,சகோதரத்துவத்தையும்,இந்து,முஸ்லிம்,கிறிஸ்தவ பெரியோர்கள் கலந்து கொள்ளும் வகையில் கொண்டாடப்படுகின்ற இவ்விழா நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் தலைமையிலும்,ஸ்ரீலஸ்ரீ புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் பங்கு தந்தை பேராயர்கள், சி.எஸ்.ஐ. திருச்சபையின் குறுவாணர்கள் ஆகியோர் முன்னிலையில் சமத்துவப் பொங்கல் நடைபெற உள்ளது.

மேலும் பொங்கல் திருநாளை முன்னிட்டு மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட உள்ளது. இவ்விழாவில் அனைவருக்கும் (நான்) நன்றி கூற உள்ளேன்.எனவே முன்னாள் இந்நாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில,மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர்,வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணியின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், தமிழ் ஆர்வலர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சமத்துவப் பொங்கலை சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

### மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் தலைமையில்

# நெல்லை மாநகர தி.மு.க. பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கினார்!

*நெல்லை, ஜன.13-*

நெல்லை மாநகர தி.மு.க. பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாநகர கழக அலுவலகத்தில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார்.

இது தொடர்பாக மாநகர செயலாளர் சுப்பிர மணியன் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் தி.மு.க. பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை)அண்டன் செல்லதுரை (பாளை) தச்சை பகுதி துணைச் செயலாளர் ஸ்டார் முருகன் மாநகர பிரதிநிதி சிவசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட 4 பகுதிகளிலும் உள்ள 55 வார்டுகளிலும்,7 வாக்கு சாவடிகளுக்கு 1 நபர் வீதம் 65 நபர்கள் வாக்குச்சாவடி தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள் 421 வாக்குச்சாவடிகளுக்கு நியமிப்பதாக ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநகர பகுதி,வட்டக் கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் பணி அறிந்த கழக சொந்தங்களாகவும் இருக்கலாம் என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது. மேலும் வாக்குச்சாவடி தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுபவர் அவரின் வாக்குச்சாவடி எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவுறுத்திய நாட்களில் வாக்குச்சாவடி தேர்வு பணி ஒருங்கிணைப்பாளர்களை தேர்வு செய்து தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளருக்கான பூர்த்தி செய்த படிவங்களை இன்று (13 ஆம் தேதி) மாலை 5 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### வேலூர் மாவட்டத்தில் - இன்று

# தகவல் தொழில்நுட்ப அணி பயிற்சி வகுப்பு!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு

*வேலூர், ஜன.13-*

வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள கழக தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்ட பேரவை உறுப்பினருமான எனது தலைமையில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அணிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் அணி, வழக்கறிஞர் அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மீனவர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி,

மருத்துவ அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு வர்த்தகர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா ஓட்டுனர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,

அயலக அணி, தொழிலாளர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டப்பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

### திண்டுக்கல்லுக்கு

# பொங்கல் திருநாளை முன்னிட்டு 150 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

*திண்டுக்கல், ஜன. 13-*

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையிலிருந்து திண்டுக்கல், தேனி, பழநி ஆகிய பகுதிகளுக்கு பயணிகள் செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் மீண்டும் சொந்த ஊரிலிருந்து சென்னை செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

மேலும் திருப்பூர் 50, கோவை 75, திருச்சி 30 மற்றும் இதர ஊர்களுக்கு 50 பேருந்துகளும் மற்றும் கூட்டத்தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் அவற்றினைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை முன்னிட்டு இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்கண்ட ஊர்களில் இருந்து குமுளிக்கு 100 சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அலுவலர்கள் மற்றும் பயணச் சீட்டு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இச்செய்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வேலூர் கோட்ட அலுவலகத்தின் வாயிலாக திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட 15 கிராமப்பகுதிகளைச் சார்ந்த 63 பயனாளிகளுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி முன்னிலையில் வழங்கப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இ.வளர்மதி, செயற்பொறியாளர் செந்தில்குமார், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.1.2024) முகாம் அலுவலகத்தில், சிங்கப்பூர் நாட்டு உள்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் கே.சண்முகம் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பெங்க் (Edgar Pang), உதவி இயக்குநர் ஷான் லிம் யங் சென், முதுநிலை மேலாளர் சுரேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.1.2024) முகாம் அலுவலகத்தில், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் மற்றும் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர் சந்தித்து தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்கள். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.

## உலகத் தமிழர் நலனுக்காக உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் - வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு

# பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது ‘திராவிட மாடல்’ அரசு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜன.13-

**உலகத் தமிழர் நலனுக்காக உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலக தமிழர் நல வாரியம் சார்பில் அயலக தமிழர் தின விழாவை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

தாய் தமிழகம் வந்துள்ள அயலகத் தமிழர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் மறுவாழ்வு துறையின் சார்பாக, அயலகத் தமிழர் தின நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாளைய தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நிகழ்விலே கலந்து கொண்டு நிறைவுரை ஆற்ற உள்ளார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய மாநில கட்சிகளிலேயே அயலகத் தமிழர்களின் நலனுக்காக ‘அயலகத் தமிழர் அணி’யைத் தொடங்கியது, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இன்னும் சொல்லப்போனால், நேற்று மாலையிலிருந்து நான் இந்த அயலகத் தமிழர்களோடுதான் பயணித்துக் கொண்டிருக்கின்றேன். நேற்று மாலை அயலக அணியின் சார்பாக அயலக அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். இன்று இந்தத் துறையைச் சார்ந்த நிகழ்ச்சியிலே, நான் கலந்துகொள்கிறேன்.

### வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு!

இந்திய ஒன்றியத்திற்குப் பல்வேறு வழிகளில் வழிகாட்டி வரும் தமிழ்நாடு அரசு 2021--ஆம் ஆண்டில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையை உருவாக்கியது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டில் வசிக்கின்ற தமிழர்களுக்காக மட்டுமல்ல, உலகமெங்கும் வசிக்கின்ற தமிழ் மொழி பேசுகின்ற அத்தனை பேருக்காகவும் உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அப்படிப்பட்ட கலைஞரின் நூற்றாண்டில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருப்பது நமக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் பெருமை. அதிலும் அயலகத் தமிழர் தினமானது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அதிகம் உச்சரிக்கப்பட்ட `தமிழ் வெல்லும்’ என்கிற அந்தக் கருப்பொருளில் நடைபெற்றுக் கொண்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியை ஒட்டி அயலக நலத்துறை சார்பாக கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்த புகைப்படக் கண்காட்சியையும் தொடங்கி வைத்து அவற்றையும் பார்த்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கின்றேன்.

### தனித்தனியாகப் பயணிக்க வேண்டும்!

இரண்டு நாட்கள் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்று உள்ளீர்கள். குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற 58 நாடுகளிலிருந்து அமைச்சர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, தொழில்துறையினராக, கவிஞர்களாக வசித்து வருகின்ற தமிழர்கள் இங்கே வருகை தந்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் நான் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

உங்களை எல்லாம் நான் சந்திக்க வேண்டும் என்றால், கிட்டதட்ட 58 நாடுகளுக்குத் தனித்தனியாக நாங்கள் பயணம் செல்ல வேண்டும். அப்படியே வந்தாலும், உங்களை சந்திப்பதற்கு நேரம் கிடைப்பது மிகவும் அரிது. ஆனால்,



இன்றைக்கு உங்கள் அனைவரையும் ஒரே இடத்தில் நம்முடைய தாய் திருநாட்டில் சந்திப்பது உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் தருகின்றது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில், துபாய், சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பயணத்தை மேற்கொண்டார்கள்.

### வாழ்த்துகளுக்கு நன்றி!

அப்பொழுது நீங்கள் எல்லாம் அவரை சந்தித்து உங்களுடைய பாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்தியிருந்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் தமிழ்நாட்டின் சார்பாக, எங்களுடைய நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேபோல், நான் வெளிநாடுகளுக்கு வரும்போதெல்லாம் என்னிடத்தில் வந்து அன்போடு விசாரித்து, உங்களுடைய இல்லத்திற்கு அழைத்து, `நல்லா இருக்கீங்களா, அப்பா– அம்மா நல்லா இருக்காங்களா?’ என்று என்னுடைய குடும்பத்தையும் விசாரித்து, எங்களுடைய ஆட்சியையும் நீங்கள் வாழ்த்தி இருக்கிறீர்கள். அதற்கும் இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் விளையாட்டுத் துறைக்கு அமைச்சராக இன்றைக்கு நான் உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன். இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உலகம் முழுவதும் நடைபெறுகின்ற பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க உலகின் பல்வேறு நாடுகளுக்கு பயணமேற்கொள்கிறார்கள். அப்படிப் பங்கேற்பதற்காக நீங்கள் இருக்கக்கூடிய நாடுகளுக்கு வரும்பொழுது அவர்களை களத்தில் ஊக்குவிப்பவர்களாக, உற்சாகப்படுத்துபவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அதற்கு இந்த நேரத்தில் விளையாட்டுத் துறையின் சார்பாக என்னுடைய அன்பையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அயலகத் தமிழர் நல வாரியம்!

இதுபோன்ற சந்திப்புகள் உண்மையில், நமக்கு இடையேயான பாசத்தை இன்னும் அதிகமாக்கும் என்று நான் நம்புகின்றேன். அயலகத் தமிழர்கள் நலனில், நம்முடைய கழக அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றது. அதற்கு ஒரு உதாரணமாகத்தான் `அயலகத் தமிழர் நல வாரிய’த்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருப்பது.

பண்டைய காலத்தில் தமிழகம் உலகெங்கும் பரவி வாழ்ந்தார்கள். அதேபோன்ற ஒரு நிலை கடந்த 20 ஆண்டுகளில் 25 ஆண்டுகளில் மிகவும் அதிகமாக இருக்கின்றது. முன்பைவிட, இப்பொழுது நம்முடைய தமிழர்கள் பல்வேறு நாடுகளில் படிப்பதற்காகவும், பணிகள் மற்றும் வேலைகள் பார்ப்பதற்காகவும் பல்வேறு நாடுகளில் எல்லாம் தங்கி இருக்கின்றார்கள். எங்கு போனாலும் எந்த நாட்டிற்குப் போனாலும் தமிழ் பேசுகின்ற மக்களைக் காண முடிகின்றது.

### 135 நாடுகளில் தமிழர்கள்

கிட்டதட்ட 135 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டுதான் இந்தத் துறையை நம்முடைய திராவிட மாடல் அரசு உருவாக்கியது.

முன்பெல்லாம் செய்தித்தாள்களை எடுத்தால், வெளிநாட்டில் வேலை எனக் கூறி ஏஜென்டுகள் ஏமாற்றினார்கள் என்ற செய்தியை தினசரி பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால், அந்த நிலை இன்றைக்குப் பெருமளவு மாறி இருக்கின்றது. ஏனென்றால், அயலகத் தமிழர் நலத்துறை மேற்கொண்ட பணிகளே இதற்கு முக்கியக் காரணம். சட்டபூர்வமாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற வழிகாட்டும் விதமாக ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு செவிலியர்களுக்கு வளைகுடா நாடுகளில் உள்ள வேலைவாய்ப்பு பற்றி ஓவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேசன் கமிட்டி நடத்திய கருத்தரங்கினை நான் தொடங்கி வைத்து உரையாற்றினேன்.

வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது மட்டுமல்ல, பணிக்காக அயல்நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களின் நலனைக் காப்பதிலும் நம்முடைய அயலகத் தமிழர் நலத்துறை முன் வரிசையில் இருக்கின்றது. அங்கு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டாலோ, பணிக்கு எடுத்த நிறுவனங்களால் பாதிப்பு ஏற்பட்டாலோ அயலகத் தமிழர் நலத்துறைக்குத் தகவல் தெரிவித்தால், உடனே பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்புகொண்டு அவருடைய பிரச்சினையைத் தீர்க்கும் மீட்கும் பணியை நம்முடைய துறை மேற்கொள்கின்றது.

மீட்பது மட்டுமின்றி அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதனால்தான் இந்தத் துறை வெறும் அயலகத் தமிழர் நலத் துறை என்று மட்டும் சொல்லாமல், அயலகத் தமிழர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத்துறை என்று சொல்கின்றோம்.

### மிகப்பெரிய ஒரு சாதனை!

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் பொழுது அங்கு தமிழர்கள் உயிரிழந்தால் முன்பெல்லாம் அவர்களுடைய உடலை, தங்களுடைய சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்குக் குறைந்தது எட்டு மாதத்தில் இருந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகும். ஆனால், நம்முடைய துறையின் சார்பாக எடுத்திருக்கின்ற பல்வேறு முயற்சிகளால் இறந்தவரின் உடலை எட்டிலிருந்து பத்து நாட்களுக்குள் அவர்களுடைய குடும்பத்துடன் நாம் சேர்த்துக் கொண்டு இருக்கின்றோம். இது மிகப்பெரிய ஒரு சாதனை. இந்த நிலை முழுவதும் மாறி இருக்கின்றது.

### இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் செவிலியர் பாதுகாப்பு!

சமீபத்தில் நடந்த உக்ரைன், ரஷ்யா போரின் பொழுது அந்த நாடுகளில் படித்த நம் மாணவர்களைப் பத்திரமாக மீட்டு, தமிழ்நாடு அழைத்து வந்தது நம்முடைய அயலகத் தமிழர் நலத்துறைதான். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதேபோல இஸ்ரேல் - பாலஸ்தீன போரின் பொழுதும் அங்குள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், செவிலியர்களைத் மீட்டுக் கொண்டு வந்தது இந்த அயலகத் தமிழர் நலத்துறைதான்.

தமிழ்நாடுவாழ் தமிழர்களுக்கு எப்படித் திட்டங்கள் தீட்டப்படுகின்றதோ, அதேபோல வெளிநாடு வாழ் தமிழர்களுக்கும் பல்வேறு திட்டங்களை நம்முடைய துறை மூலம் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுடைய பிள்ளைகள் தமிழ் மொழியைக் கற்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பாக நூல்களை வழங்கி, அவர்கள் தமிழ் கற்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தந்து வருகின்றது. தமிழர்கள் பல நாடுகளில் தொழில் முனைவோராக உள்ளார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைக்கின்ற விதமாகவும் பல்வேறு பணிகள் நம்முடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருது!

இரண்டு நாட்களுக்கு முன்பு இதே அரங்கில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான தமிழ் தொழில் முனைவோர்கள், பங்கேற்றவர்கள். அயலகத் தமிழர்களுடைய தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் போற்றுகின்ற வகையில் உலகத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விருதுகளையும் பரிசுகளையும் நம்முடைய கழக அரசு தொடர்ந்து வழங்கி வருகின்றது.

இந்தப் பணிகள் அனைத்தும் அயலக தமிழர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத் துறையின் வாயிலாகவே சாத்தியமாகின்றது. இந்த இரண்டு நாள் கருத்தரங்கில் அமைச்சர்கள், கவிஞர்கள், தொழில் முனைவோர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெரியவர்கள் பங்கேற்று பேச உள்ளார்கள். இந்த அயலகத் தமிழர் தினம் 2024 மிகப்பெரிய வெற்றியைப்பெற என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த நம்முடைய அமைச்சர் மஸ்தான் அவர்களுக்கும் துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி வரவேற்புரை ஆற்றினார். அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு துறையினுடைய ஆணையர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, அப்துல்லா, தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி , சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மலேசியா, இலங்கை, மொரீஷியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், சாணக்கியன் ராசமாணிக்கம், மலேசியாவின் முன்னாள் அமைச்சர் டத்தோ கமலநாதன், வழக்கறிஞர் புகழ் காந்தி, சிங்கப்பூர் ராம், சிங்கப்பூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தினகரன், டெக்டான் குழுமத் தலைவர் லட்சுமணன், விஸ்வா லோட்டஸ் குழுமத் தலைவர் துரை சிங்கம், ஏர் மொரீஷியஸ் தலைவர் மார்பே வெங்கடசாமி, மருத்துவர் ராமசாமி தனபால், சிங்கப்பூர் நாவுக்கரசு, கனடாவைச் சேர்ந்த சுபாஷ் சுந்தர்ராஜ், மலேசியாவை சேர்ந்த முகமது இக்பால் ராவுத்தர், லண்டன் ஃபைசல், தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் மா.ராசேந்திரன், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை அரசு செயலர் நந்தகுமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம், மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற “நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்காக ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது” என்ற கருத்தரங்கில் கலைஞரின் சிறப்புகள் குறித்து கருத்துரை வழங்கி மாணவிகளுக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் பரிசுத்தொகை சான்றிதழ் ஆகியவற்றை வழங்கினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் தலைவரும் குழு உறுப்பினருமான இரா.ஆவுடையப்பன், சட்டப்பேரவை முன்னாள் செயலாளர் செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் நாகரத்தினம், இணைச் செயலாளர் தேன்மொழி மற்றும் கல்லூரி நிர்வாகிகள் உள்ளனர்.

# உடன்பிறப்பே... 40

**தி.மு.க. என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த தாழை மு.கருணாநிதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**




# தாழை மு.கருணாநிதி : கலைஞர் பெயரில் ஒரு தளகர்த்தர்!

டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர், 1950-ஆம் ஆண்டுகளில் அன்றைய தஞ்சை ஜில்லாவின் அரசியல் எழுச்சி மையமாக இருந்தது. நில உடைமையாளர்களின் சாணிப்பால், சவுக்கடிக் கொடுமைகளுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியினர் போராட்டங்களை நடத்திய பூமி அது. காங்கிரஸ் செல்வாக்குக்கு எதிராக விவசாயத் தொழிலாளர்களை அணிதிரட்டி அமைப்பாக்கிக் கொண்டிருந்தனர் அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியினர். திராவிட இயக்கத்தின் செல்வாக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் முன்னணித் தலைவராகத் திகழ்ந்த கலைஞரின் களப்பணியும் 50 களில் திருவாரூரை அரசியல் பரபரப்பான ஊராக மாற்றி இருந்தது. சற்றேறக்குறைய அந்த நாட்களில் ஐந்து வயது சிறுவனாக இருந்தார், இந்த வாரம் ‘உடன்பிறப்பே’ தொடரில் இடம் பெறும் கழகத்தின் பெரும் தொண்டர் தாழை மு.கருணாநிதி. அவர் பிறந்த தேதி ஜனவரி 1, 1945.

திருவாரூரில் இருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அம்மையப்பன் எனும் ஊருக்கு அருகில் உள்ள கிராமம் தாழைக்குடி. அந்த கிராமத்துக்கு முறையான சாலை வசதிகூட அப்போது கிடையாது. ஆனால், அரசியல் நுழைந்திருந்தது. தாழை மு.கருணாநிதி அவர்களின் தந்தையார் முருகையன், விவசாயத் தொழிலாளி என்றாலும், அன்றைய காங்கிரஸ் கட்சியில் செயல்பட்டு வந்தவர். உள்ளூர் பண்ணையார்கள் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் முருகையன் அவர்களின் சொல்லுக்கு மதிப்பு இருந்தது.

## தந்தையின் செல்வாக்கு

வறுமையில் இருந்தும், பண்ணையடிமை முறையில் இருந்தும் மீண்டிருந்தவர் என்பதால், தனது மகனை அம்மையப்பனுக்குக் கல்வி பயில அனுப்பினார். அப்படிப் படிக்க வந்த கருணாநிதிக்கு, அம்மையப்பனில் தீவிரமாக இயங்கி வந்த பெரியார் இயக்க அறிமுகம், தி.மு.க தொடர்புகள் அவரை மாணவர் தி.மு.க வில் ஐக்கியம் ஆக்கின.

அவரது 12வது வயதில் தி.மு.கழகம் முதல்முறையாகத் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக இருந்தபோது, முருகையன் திருவாரூர் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்குகிறார். அப்போது, இரட்டை வாக்குரிமை என்பதால், தாழ்த்தப்பட்டவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும். ஆனால், பண்ணையார்களின் கையாள்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட வேட்பாளராக நிறுத்தப்பட்டார்கள் என்பதால், தனிப்பட்ட செல்வாக்குடன் இருந்த முருகையன் சுயேட்சையாக ஆலமரம் சின்னத்தில் போட்டியிட்டார். அவருக்கு சுதந்திரா கட்சி ஆதரவு அளித்திருந்தது. முருகையன் வெற்றி பெறவில்லை என்றாலும், தனது மகன் அரசியல் கற்றுக் கொள்வதற்கு, அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதற்கான முயற்சிகளைப் புரிந்து கொள்வதற்கு அது பாடமாக இருந்தது. அப்படித்தான் தாழை மு.கருணாநிதி உருவானார்.

தாழை அவர்களின் 20-வது வயதில் தி.மு.கழகம் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டமும், விலைவாசி உயர்வுப் போராட்டமும் மிகத் தீவிரமாக இருந்தது. டெல்டா மாவட்டங்களில்தான் நெல் கடத்தல் சம்பவங்களும் அப்போது நடைபெற்றன என்பதால், கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட விலைவாசி உயர்வுப் போராட்டங்களில் அப்பகுதியில் தாழை தீவிரமாக இருந்தார். போராட்டத்தின் போது உண்ணாவிரதம் இருந்து கைது செய்யப்பட்டார்.

## சவாலான கழகப்பணி

திருவாரூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காங்கிரஸ் செல்வாக்கை இழந்து கொண்டிருந்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்கு செலுத்தத் தொடங்கி இருந்தது. அதே காலத்தில் தி.மு.கவை வளர்ப்பதை சவாலான பணியாக ஏற்றுச் செய்தவர் தாழை.

காங்கிரஸில் இருந்து விலகி, தி.மு.கவில் இணைந்தால் காங்கிரஸ்காரர்கள் அடிப்பார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகி, தி.மு.க.வில் சேர்ந்தால், அந்தக் கட்சியினரும் அடிப்பார்கள். இப்படி அடிக்கு பயந்து கட்சி மாறாமல் இருக்கும் மக்களை தி.மு.கவுக்குக் கொண்டு வருவது எப்பேர்ப்பட்ட சவால் என்பதை அந்தக் காலத்தைக் கண்முன் நிறுத்தி புரிந்து கொள்ளலாம்.

அப்படித்தான் அவர் அம்மையப்பன் பகுதியில் தி.மு.க.வை அசைக்க முடியாத தூணாக எழுப்பினார்.தாழைக்குடி பஞ்சாயத்துத் தலைவர், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத் துணை பெரும் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர், தஞ்சை மாவட்ட நலக்குழு உறுப்பினர் என அடுத்தடுத்துப் பொறுப்புகள் அவரைத் தேடி வந்தன.

முத்தமிழறிஞர் கலைஞரின் விருப்பத்திற்குரிய தாழை மு,கருணாநிதிக்கு 1971-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை அளித்தார் கலைஞர். மிசா நெருக்கடி நிலை காலத்தின் போது ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த வருக்குத் திரும்பவும் திருவாரூர் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராக வாய்ப்பு அளித்தார் கலைஞர்.

**மாவட்டச் செயலாளர் பதவிக்கு, தான் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை, தாழை தனது தொண்டால் உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்**

தாழையின் உழைப்பை அறிந்த கலைஞர் 1980ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது நாகப்பட்டினம் தொகுதியில் இருந்து மக்களவை உறுப்பினராக்கி, அனுப்பி வைத்தார்.

## கலைஞரின் ஆசை

மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து, தஞ்சை ஜில்லா கழக வளர்ச்சியைக் கவனித்த அவரை மாவட்டச் செயலாளராக்கி அழகு பார்த்தார் கலைஞர். இப்படி இளம் வயதிலேயே அடுத்தடுத்த பொறுப்புகளில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர் தாழை மு.கருணாநிதி

மாவட்டச் செயலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஒரே நேரத்தில் அவரே இருந்ததால் ‘நான் ஒரு பொறுப்பில் மட்டும் இருந்து கொள்கிறேன்’ என கலைஞரிடம் உரிமையோடு சொன்னவர் தாழை.

சிறப்புடன் பணியாற்றிக் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்ட அவர் 1986 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி திடீரென உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.

துடித்துப்போன கலைஞர், திருவாரூருக்குச் சென்று அஞ்சலி செலுத்தியதுடன், தனது உடன்பிறப்புக்காகப் பெரும் இரங்கல் குறிப்பு எழுதினார். "அனைவரிடமும் சகோதரப் பாசத்துடன் பழகக்கூடிய நற்பண்பாளர் தாழை மு.கருணாநிதி. மாவட்டச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கே அதிக வாய்ப்புகளைத் தர வேண்டும் என்பது என் ஆசை. எனது சொந்த மாவட்டத்திலேயே தாழை மு.கருணாநிதி மூலம் அந்த ஆசை நிறைவேறியது. மாவட்டச் செயலாளர் பதவிக்கு, தான் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை, தாழை தனது தொண்டால், உழைப்பால் நிரூபித்துக் காட்டினார்” என முத்தமிழறிஞர் கலைஞர் புகழாரம் சூட்டினார்.

தி.மு.கழகம் தேர்தலைச் சந்தித்த காலத்திலிருந்து திருவாரூர் தொகுதி கழகத்தின் கோட்டையாக இருக்கிறது. கலைஞர் அதை உருவாக்கினாலும், தாழை மு.கருணாநிதி போன்றவர்கள் அதைக் கட்டிக் காத்தனர். கழகத்தவர்கள் உருவாக்கிய அந்த மண் என்றும் தாழை மு.கருணாநிதி புகழைப் போற்றிக் கொண்டிருக்கும்.

...துடிக்கும்

## சுக்கு நூறாக உடையும் பா.ஜ.க. பிம்பம்!




2014-இல் இருந்து மோடி படைத்த புதிய இந்தியாக்கள் எத்தனை எனத் தனி நூலே போடலாம். அந்த அளவுக்குப் பெரிய பட்டியலை பா.ஜ.க.வினர் நீட்டுவார்கள். ஆனால், வேலை யின்மை, சமத்துவமின்மை என மோடி ஆட்சியில் இந்தியா அடைந்து வரும் அசமத்துவம், நீர்த்துப் போயிருக்கும் ஜனநாயக விழுமி யங்கள், பா.ஜ.க.வின் போலி வாக்குறுதிகள் என, சீர்குலைவுச் சித்திரத்தின் சாட்சியே 10 ஆண்டுகால மோடி ஆட்சி.

அதுமட்டுமல்ல, புள்ளிவிவரங்களை மறைத்தல், தன்னாட்சி அமைப்புகளின் பார பட்சத்தன்மை, சிறுபான்மையினரை நிராக ரித்தல், பேரிடர்களைக் கையாள முடியாமையும் பா.ஜ.க ஆட்சி அலங்கோலங்களில் அடங்கும். இவற்றுக்குப் பின்னணியில் இருக்கிற பா.ஜ.க.வின் மதப் பெரும்பான்மைவாதம், சர்வாதிகாரப் போக்கு, தெளிவற்ற பொருளாதாரப் பார்வையைப் போட்டுடைத்த ஆங்கில நூல் ‘தி க்ரூக்ட் டிம்பர் ஆ்ஃப் நியூ இந்தியா’. ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரான பரகால பிரபாகர் எழுதிய இந்நூலின் அதிர்வுகள் கொஞ்சமும் குறை யாமல், அப்படியே தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜய்சங்கர். ‘புதிய இந்தியா எனும் கோணல் மரம்’ என்ற தலைப்பில் தமிழில் வெளியாகியுள்ள இந்நூலை எதிர் வெளியீடு பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. விலை ரூ.399. நாடாளு மன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னால், பா.ஜ.க.வின் போலி பிம்பத்தைச் சுக்கு நூறாக உடைக்கும் ஆவணம் தமிழில் வெளியாகியிருப்பது மிகப் பொருத்தமானது. அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

## :ப்ளாஷ்பேக்





ஆறுமுகம்

### காசுமாலை வரவேற்பு!

தமிழ்நாட்டை 1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை சூழ்ந்த போது, கழகத் தலைவர் அவர்கள் தஞ்சாவூர் நகரத்துக்கு வருகை தந்திருந்தார். அப்போது டாக்ஸி ஓட்டுநர் சங்கம் சார்பாக, காசுமாலை அணிவித்து வரவேற்றோம். நான் அன்று ஓட்டுநர் சங்கத் தலைவராக இருந்தேன். மிசா வழக்கு நிதியாகப் பயன்படுத்தப் படும் என்று தலைவர் அந்தக் காசு மாலையைச் சுட்டிக்காட்டி உரையாற்றி னார். அப்போது நாங்கள் எடுத்துக்கொண்ட இந்தப் புகைப்படம் என் வாழ்வில் மறக்க முடியாத புகைப்படம் என்பேன்.

**-டாக்ஸி ஆறுமுகம்,
கழகப் பொதுக்குழு உறுப்பினர், தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் ஆங்கிலப் புலமை!

**1934-இல் திருச்சி தேவர் மன்றத்தில் ‘நீதிக்கட்சியின் மாநாடு’ நடைபெற்றது. கி.ஆ.பெ.விசுவநாதம் நடத்திய இந்த மாநாட்டில், மாநாட்டுத் தலைவரான சர்.ஏ.ராமசாமி முதலியார் பேச்சை தமிழில் மொழிபெயர்க்க, ஒருவரைத் தேடினார்கள். வழக்குரைஞர்கள் பலர் இருந்தும் மறுத்துவிட்டனர். அண்ணாவை ஒருவர் அறிமுகப்படுத்தினார். அப்போது, அண்ணா கல்லூரி முடித்த இளைஞர். பெரிய தலைவரின் பேச்சை மாணவர் மொழிபெயர்த்தால் நன்றாக இருக்குமா என்ற தயக்கம் இருந்தாலும், வேறு யாருமே இல்லாததால் சம்மதித்தார் கி.ஆ.பெ. ஆனால், அண்ணாவின் மொழி பெயர்ப்புத் திறனைப் பார்த்து கி.ஆ.பெ.வும், ராமசாமி முதலியாரும் வியந்துவிட்டனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 358




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131